Annual Subscription Rs. 90/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 25 இதழ் - 4 ஏப்ரல் 2012

தனிப் பிரதி ரூ. 9/-



ஜெபியுங்கள் ! பங்கு பெறுங்கள் !!

**பதினைந்தாம் வேனிற்கால வேதாகம முகாம் மற்றும்**

**"திருமறை தியானம்" நேயர்கள் &**

**"திருமறை ஆசான்" வாசகர்கள் கருத்தரங்கம்**

**இடம் : YMCA வளாகம், ஏலகிரிமலை (வேலூர் மாவட்டம்)**

**நாள் : மே மாதம் 7,8,9 - 2012 (திங், செவ், புதன்)**

**உணவும், தங்குமிடமும் இலவசம்**

பதிவுக் கட்டணம்

**பெரியவர்கள் ரூ. 150 /- சிறியவர்கள் ரூ. 100 /-**

**கிறிஸ்துவின் சபை**

288, தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.

PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

**குறிப்பு : சுமார் 400 பேர் மாத்திரமே தங்க இட வசதி உண்டு.**
**ஆகவே M.O. செய்து முன் பதிவு செய்து கொள்ளுங்கள்.**

## ஆசானின் போதனையில்....


1 . ஆசிரியர் உரை ........ 1

2 . ஏன் நாங்கள் நியாயத்தீர்ப்பில் விசுவாசம் வைக்கிறோம்? ........ 11

3 . நிழலும், நிஜமும் ........ 15

4 . பெண்கள் பகுதி ........ 19

5 . வாலிபர் பகுதி ........ 23

6 . சிறுவர் பகுதி ........ 26

7 . வசன ரீதியான கிறிஸ்துவின் சபை ........ 28

8 . உங்களை நடத்துகிறவர்களுக்கு கீழ்ப்படிந்து அடங்குங்கள் ........ 31


- ஒன்றுக்கு மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.
- முகவரி மாற்றத்தை கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.
- இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு எழுதவும்.
- M.O. செய்பவர்கள் தகவலுக்கான பகுதியில் உங்கள் தெளிவான விலாசத்தை கண்டிப்பாக எழுதவும்.
- அஞ்சல் வழியில் வேதாகம படிப்பவர்கள் உங்களது தொலை / அலை பேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தைத் தவிர்க்க இது உதவும்.

- ஆசிரியர்

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor
86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 25 | APRIL 2012 | Issue - 4


ஆசிரியர் உரை

## தாவீதின் சேனை

பரலோகத்தின் தேவனால், அவருடைய ஆவியானவரைக் கொண்டு அருளப்பட்டிருக்கும் வேத வசனங்களனைத்தும் இப்பூலோக மாந்தரின் ஆன்ம நன்மைக்காகவும், ஆவிக்குரிய மேம்பாட்டுக்காகவுமே கொடுக்கப்பட்டுள்ளது. தேவனால் இப்படி கொடுக்கப்பட்டிருக்கும் அனைத்தும் பிரயோஜனமானவைகள் என்று எபேசு பட்டணத்து மூப்பர்களிடத்தில் அப்போஸ்தலன் பவுல் பேசும்போது குறிப்பிடுகிறார். (அப். 20:20). ஆகையால், பரிசுத்த வேதாகமத்தின் ஆரம்பம் தொடங்கி, முடிவு வரையுமுள்ள அனைத்தும், மனுக்குலத்தின் பிரயோஜனத்துக்கானவையே.

ஆகவே தான், கிறிஸ்துவின் காலத்தில் வாழும் நமக்கு வழிகாட்டியாக இருக்கும்படியாக சர்வ வல்லவரால் கொடுக்கப்பட்டிருக்கும் புதிய ஏற்பாட்டில், அப்போஸ்தலன் பவுலைக் கொண்டு பரிசுத்த ஆவியானவர் சொல்லும் போது, "தேவவசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும், ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர்களாகும்படிக்கு, முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக கொடுக்கப்பட்டுள்ளது" என்கிறார் (ரோம. 15:4). இதே பவுலடியார், தான் சொல்லும் இக்கருத்துக்கு வலு சேர்க்கும்படியாக, ஆவியினால் ஏவப்பட்டு, கொரிந்தியருக்கு எழுதும் போது, இவைகளெல்லாம் (பழைய ஏற்பாட்டுக் காரியங்கள்) திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்து, உலகத்தின் முடிவு காலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாகும்படி எழுதப்பட்டும் இருக்கிறது என்கிறார் (1 கொரி. 10:11)

மேற்காணும் வசனங்களை நாம் கவனிக்கும் போது, புதிய ஏற்பாட்டுக் காலத்தில் வாழும் நமக்கு, பழைய ஏற்பாட்டுக் காரியங்கள் போதனையாகவும், எச்சரிப்புண்டாகும்படி யாகவுமே எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளதென்பதை நாம் நிச்சய மாகவே அறிய வேண்டும். இதுதான் உண்மை.

அப்படியானால், நம்மில் எத்தனை பேர் பழைய ஏற்பாட்டைப் படிக்கவேண்டிய விதத்தில் படித்து, அதிலிருந்து போதனைகளையும், எச்சரிப்பையும் பெற்று வருகிறோம், சொல்லுங்கள். ஒருவேளை, உங்களில் பலர், அப்படியெல்லாம் ஒன்றுமில்லை நாங்கள் ஆதியாகமம் போன்ற ஆகமப் புத்தகங் களை அவ்வப்போது படிக்கிறோம் என்றும், யோசுவா, நியாயாதிபதிகள் போன்ற சரித்திர புத்தகங்களை குறிப்புகளுக் காகப் புரட்டுகிறோம் என்றும், ஏன் சங்கீதம், நீதிமொழிகள் போன்ற புத்தகங்களை நேரம் கிடைக்கும் போது தியானிக்கவும் செய்கிறோம் என்றும், இன்னும் ஏன், ஏசாயா, எரேமியா போன்ற தீர்க்கதரிசனப் புத்தகங்களை ஊழியர்கள் பிரசங்கிக்கும் போது கொஞ்சமாவது கவனிக்கிறோம் என்றும் கூறக்கூடும். சரி, உங்களைப் பார்த்து இன்னுமொரு கேள்வி கேட்கிறேன். பழைய ஏற்பாட்டில், பலரால் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள நாளாகமம் போன்ற புத்தகங்களையும், அதிலே காணப்படும் சில குறிப்பிட்ட அதிகாரங்களையும் எப்பொழுதாகிலும் கண்டு, வாசித்து, தியானித்து பாடம் கற்றிருக்கிறீர்களா? இப்பொழுது, சொல்லுங்கள் பார்க்கலாம்!.

எனக்குத் தெரிய வேதாகமத்தை முறையாகக் கற்க வரும் மாணாக்கர்களே கூட, நாளாகம நூலா, அதிலே படிக்க என்ன இருக்கிறது? சாமுவேலிலும், ராஜாக்களிலும் சொல்லப்பட்டவை கள் திரும்பவும் வரிசைக் கிரமமாகச் சொல்லப்பட்டிருக்கிறது, அவ்வளவு தான். அதை ஏன் படிக்க வேண்டும் என நினைக்கி றார்கள். ஆனால், நாளாகமத்திலும், நாம் வாழும் காலமெல்லாம் நினைவில் வைத்துக் கொள்ளக்கூடிய காரியங்கள் நிறைய உண்டு என்பது தான் உண்மையிலும் உண்மை. இவ்வுண்மையை அநேகர் அறிந்து கொள்ள வேண்டுமென்று தான், இம்மாதம், 1 நாளாகமப் புத்தகம், 12-ம் அதிகாரத்திலிருந்து தலைப்பைத் தெரிந்துள்ளேன்.

சரி, வேதத்தை நேசிப்பவர்களுக்கு, தாவீது என்ற வார்த்தை ஓர் ஈர்ப்புள்ள வார்த்தை என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. ஏனெனில், அவனைப் பற்றிப் பேசுவதிலும், எழுதுவதிலும் அவ்வளவு சுவாரசியம் நிறைந்திருக்கிறது. அவனுடைய வாழ்க்கையை நாம் விதவிதமான கோணங்களில் கண்டுகளிக்க முடியும். அவ்வளவு சிறப்புகளுக்குச் சொந்தக்காரன் அவன். அப்படிப்பட்ட தாவீதை நாம் விதவிதமாக அறிந்து வைத்திருந் தாலும், ஆரம்ப நாட்களில் அவனுக்குக் கிடைத்த சேனை பற்றி, நம்மில் அநேகர் அறியவேண்டிய அளவுக்கு அறிந்திருக்க மாட்டோமென்று நான் தைரியமாக நம்புகிறேன். அந்த

சேனை சாதாரண சேனை அல்ல. தாவீதுக் காக, சுக துக்கங்களை மறந்து, இன்னல்கள் பலவற்றை ஏற்றுக் கொண்ட சேனை. தாவீதின் வார்த்தைக்காக தங்கள் பிராணனையே துச்சமென நினைத்த சேனை (1 நாளா. 11:19) அவனுடைய வாழ்வின் முக்கியமான கட்டத்தில், அவன் தன்னை நிலை நிறுத்திக் கொள்வதற்கு அந்த சேனை தான் மிகவும் உறுதுணையாக இருந்திருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

பராக்கிரமசாலிகளைக் கொண்ட இச்சேனை பற்றி 1 நாளாகமம் 12-ம் அதிகாரத்தில், நம்முடைய கண்களை அகல விரித்துப் பார்த்தால் நாம் நம்முடைய பாஷையில் சொல்வ தனால், போர் அடிக்கும். நைசாக வேதத்தை மூடி வைத்து விட்டு வேறு வேலை பார்க்கலாம் என்று எண்ணத் தோன்றும். ஆம், வாயிலே நுழைவதற்கே சிரமப்படும் பெயர்ப்பட்டியல் தான் பிரதானமாக இருக்கும். ஆனால், கவனத்துடனும், தெய்வ பயத்துடனும் வாசித்தால், பாலைவனமாகக் காட்சி தரும் இவ்வதிகாரத்தில், ஆங்காங்கே பசுஞ்சோலைகள் இருப்பதைக் கண்டிப்பாகக் காணலாம். அத்தோடு தேவ வார்த்தைகளின் மேன்மையையும் நாம் உணரலாம். வாசித்துப் பார்ப்பீர்களா?

சரி, இக்கால கட்டம் தேவச் சித்தப்படி, தாவீது தன்னை ராஜாவாக முடிசூட்டிக் கொள்வதற்கான சகல சாதகச் சூழலும் நெருங்கிவிட்ட சமயம். தன்னை எல்லாவகையிலும் நிலைப் படுத்திக்கொள்வதற்கான வெற்றிகளை உறுதி செய்வதற்கு, நிறைவான தகுதியம்சங்களைக் கொண்ட பராக்கிரமசாலிகள் தேவைப்பட்ட நேரம். அப்பொழுதுதான் இஸ்ரவேலருக்கும், ஏறக்குறைய எல்லாக் கோத்திரத்தைச் சேர்ந்தவர்களும், தாமாக முன்வந்து, தாவீதினிடமாகச் சேர்ந்து கொண்டு, தீர்க்கதரிசியின் வாக்கின்படியான வெற்றிக்கு வித்திட்டார்கள்.

உண்மையை உணர்ந்து கொண்டு தாவீதிடம் வலியப் போய்ச் சேர்ந்து கொண்ட அச்சேனையிடம், சகல நற்பண்புகளும் மண்டிக் கிடந்தது. கிட்டதட்ட எல்லாக் கோத்திரத்தாரிடமும் ஏதாவதொரு சிறப்பம்சத்திற்கு குறைவில்லை என்ற நிலை காணப்பட்டது. அவர்களெல்லாரைப் பற்றியும் நாம் இங்கே படிக்க நமக்கு நேரமில்லை. ஆயினும், வேதாகமம், மெய் சத்தியத்தின்படியான கிறிஸ்தவர்களை போர்ச் சேவகர் என்று கூறுகிறபடியாலும் (2 தீமோ. 2:3,4) ஒவ்வொரு உண்மையான கிறிஸ்தவனும் கர்த்தருடைய சபையாகிய சேனையின் அங்கமாயி ருக்கிறபடியாலும், நாம் தாவீதின் சேனையிலிருந்த பராக்கிரம சாலிகள் பற்றிப் படிப்பது, நம்முடைய கிறிஸ்தவ ஜீவியத்தில் நாம் எப்படிப்பட்ட தன்மை கொண்டவர்களாக இருக்க வேண்டு மென்பதை நமக்குக் காட்டுமாகையால், அது பற்றி கொஞ்சம் தெரிந்து கொள்வோம்.

**I மனமுவந்து செயல்படுகிற, சோதனைகள் கண்டு கலங்காத "காத்தியர்" (12:8-15)**

தாவீதுடைய சேனையிலிருந்த காத் கோத்திரத்தாரிடமிருந்து நமக்குக் கிடைக்கும் முதல் பாடம், அவர்கள் மனமுவந்து

செயல்படுகிறவர்களாகவும், சோதனைகளைக் கண்டு கலங்காதவர் களாகவும் இருந்தார்கள் என்பது.

ஆம், சிங்கம் போன்ற வீரமும், வெளிமான் போன்ற வேகமும் கொண்ட காத்தியர், தாங்களாகவே முன்வந்து, தாவீதின் பட்சத்திலே சேர்ந்தார்கள் என்று வசனம் கூறுகிறது (வச. 8) தாவீதின் பட்சத்திலே வந்து சேருங்கள் என்று இவர்களை யாரும் நிர்பந்திக்கவோ, ஆதாயம் கிடைக்கும் என்று ஆசைகாட்டவோ, ஆபத்து வரும் என்று மிரட்டவோ இல்லை. தேவனுடைய வார்த்தையின் யதார்த்த நிலையை சீர்தூக்கிப் பார்த்திருக் கிறார்கள். கர்த்தர், இப்பொழுது ஆட்சிக் கட்டிலில் அமர்ந்தி ருக்கும் சவுலின் பட்சத்திலிருக்கிறாரா அல்லது இன்னமும் ஓடி ஒளிந்து கொண்டிருக்கும் தாவீதினிடத்திலிருக்கிறாரா என்று கவனித்துப் பார்த்திருக்கிறார்கள். கர்த்தர் தாவீதின் பக்கம் தான் என்பதை சாமுவேல் தீர்க்கனின் வார்த்தைகள் வழியாகக் (1 நாளா 11:2) கண்டுகொண்டு, அவர்களாகவே தாவீதின் பட்சத்தில் போய் சேருவோம் என்று வந்திருக்கிறார்கள்.

இந்தவிதமாக அவர்கள் சிந்தித்து செயல்பட்டது ஒரு சாதாரண விஷயம் அல்ல. சாமுவேல் தீர்க்கனைக் கொண்டு குறைந்த இடங்களிலே தான் இவ்வுண்மையை தேவன் வெளிப் படுத்தியிருந்தார் (1 சாமு. 15:23-16:3; 24:20; 2 சாமு. 5:10,12) ஆயினும், அவர்கள் எது சரி என்பதைக் கண்டுபிடித்துத் தீர்மானம் செய்து, தாவீதின் பட்சத்தில் மனப்பூர்வமாய்ச் சேர்ந்திருக் கிறார்கள்.

இந்த உண்மையை இன்றைய கிறிஸ்தவ உலகத்தோடு சற்று ஒப்பிட்டுப் பார்ப்போம். சபைகள் என்ற பெயரில் ஏராளமான பிரிவினைக் கூட்டங்கள் கிறிஸ்தவ மத உலகில் நிறைந்து காணப் படுகிறது. எது, தேவனுடைய பார்வையில் சரியானது என்றும், எந்த சபையிடம் அங்கமாவது நியாயம் என்றும் தெரியாமல், கிறிஸ்தவ உலகம் தடுமாறிக்கொண்டுள்ளது. இத்தனைக்கும் ராஜ்யமாகிய சபை பற்றி பல தீர்க்கதரிசிகள் தெளிவாகவும், துல்லியமாகவும் தீர்க்கதரிசனம் உரைத்திருக்கிறார்கள் (தானி. 2:44, ஏசா. 2:2,3; யோவான் 2:28-32) ஆயினும், எதுசரி என்று அநேகர் இன்னும் கண்டுபிடித்த மாதிரி தெரியவில்லை. இவ்விஷயத்தில் காத் புத்திரரைப் போல, தேவனுடைய வசனங் களினடிப்படையில், உண்மை எதுவென்று கண்டுபிடிப்பது நம்முடைய தலையாய கடமையென்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

காத் புத்திரர் குறித்து வேதாகமம் வெளிப்படுத்துகிற இன்னொரு காரியம், அவர்கள் "யோர்தானில் வெள்ளம் கரை புரண்டு ஓடுகின்ற முதலாம் மாதத்தில்" (வச. 15). யோர்தானைக் கடந்திருக்கிறார்கள் என்பது வெள்ளப் பெருக்கின் போது, யோர்தானை மட்டுமல்ல, எந்த ஒரு பெரிய நதியையும் கடப்பது

மிகவும் ஆபத்தானது. ஆனாலும், அவர்கள் கடந்து போய் செய்ய வேண்டியதைச் செய்திருக்கிறார்கள். இது, கர்த்தருக்காகக் காரியமாற்றுவதில் அவர்களுக்கிருந்த நெஞ்சுரத்தைக் காட்டக் கூடியதாகவும், எதிர்ப்பைக் கண்டு அஞ்சாத தீரத்தைப் பறை சாற்றுவதாகவும் உள்ளது.

அருமையானவர்களே, இன்றைக்கு நம்முடைய நிலை எப்படியிருக்கிறது? எது நீதி என்று கண்டுபிடிக்கும் விஷயத்திலும், அப்படிக் கண்டுபிடித்ததற்குப் பிறகு, அதற்காகச் செயல்படுகிற விஷயத்திலும் நாம் எப்படிப்பட்டவர்களாயுள்ளோம்? சிந்திப்போம். ஒரே ஒரு தீர்க்கதரிசியினுடைய வார்த்தையினடிப்படையில் காத்தியர் எப்படி செயல்பட்டிருக்கிறார்கள் என்று எண்ணிப்பாருங்கள்! இன்றைக்கு நமக்கு, உண்மையான சபை பற்றி பிரபல தீர்க்கதரிசிகளும், தேவனுடைய ஒரேபேறான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவும் எவ்வளவு சொல்லியிருக்கிறார்கள் என்று ஆராய்ந்து பாருங்கள். ஒருவேளை, நாம், உண்மையான சபை எது என்று கண்டுபிடிக்கிற விஷயத்திலும், அதை அடைவதற்கு எடுக்கவேண்டிய முயற்சிகள் பற்றிய காரியத்திலும் எதுவும் செய்யாதவர்களாக இருந்தால், இந்த காத்தியரிடமிருந்து இப்பொழுதே பாடம் கற்று, செய்ய வேண்டியதை உடனடியாகச் செய்வோம்.

## II. காரியத்தில் தெளிவும், உண்மையோடு சமரசம் செய்து கொள்ளாத போக்கும் கொண்ட " பென்யமீனர் " (12:18)

தாவீதின் சேனையிலிருந்த பென்யமீன் கோத்திரத்தாரிடமிருந்து, நம்மால் கற்றுக்கொள்ள முடிகின்ற பாடம், அவர்கள், தங்கள் நிலையில் தெளிவும் உறுதியுமுள்ளவர்களாய் இருந்தது மட்டுமல்லாமல், உண்மையோடு சமரசம் செய்து கொள்ளாதவர்களாகவும் இருந்தார்கள் என்பது. 1 நாளா 12:18-ல் பென்யமீனர், **தாவீதே, நாங்கள் உம்முடையவர்கள், ஈசாயின் குமாரனே, உமது பட்சமாயிருப்போம், உமக்குச் சமாதானம், சமாதானம், உமக்கு உதவி செய்கிறவர்களுக்கும் சமாதானம், உம்முடைய தேவன் உமக்குத் துணை நிற்கிறார்** என்கிறார்கள். "அப்பொழுது ராஜாவாக இருந்த சவுலின் சொந்தக் கோத்திரத்தைச் சேர்ந்த இவர்கள், தேவனுடைய சித்தத்தை அறிந்து, அதற்குத் தங்களை முழுமையாக ஒப்புக்கொடுத்து, தாவீதினிடமாக வந்து சேர்ந்த போது, சவுலின் கோத்திரத்தைச் சேர்ந்த தங்களைக் குறித்து தாவீதுக்கு எந்த சந்தேகமும் வரக் கூடாது" என்று எண்ணி, "**தாவீதே, நாங்கள் உம்முடையவர்கள்**" என்று அடித்துச் சொல்லுகிறார்கள்.

பென்யமீன் கோத்திரத்தாரின் இந்த வெளிப்படையான அறிக்கை, இன்றைக்கு கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொண்டு இரண்டும் கெட்டான் நிலையில் ஜீவிப்பவர்களுக்கு மரண அடி

கொடுக்கக்கூடியதாயிருக்கிறது. நாங்களும் கிறிஸ்தவர்கள் என்று சொல்லுகிறவர்கள், தங்கள் நிஜவாழ்க்கையில், யார் பக்கம் நிற்கிறார்கள் என்பதே அவ்வளவு லேசில் தெரிவதில்லை. ஆம், ஞாயிற்றுக்கிழமை காலையில் பார்த்தால், கர்த்தர் பக்கம் தான் இந்த சகோதரன் இருக்கிறான் என்று எண்ணத் தோன்றும். ஆனால், அதே மத்தியானம் அவர் இருக்கிற நிலையைப் பார்த்தால், பிசாசின் கொத்தடிமையாக பரிதாபமாகக் காட்சி யளிப்பார். சில நேரங்களில், வீடு சந்திப்புக்குப் போகும்போது அடப் பரவாயில்லையே இந்த அம்மா இவ்வளவு அடக்கமாக, பக்தியாக இருக்கிறார்களே என்பது போலத் தெரியும். ஆனால், அடுத்த வாரம், நாம் பெரிதாக நினைத்த அந்த அம்மா பற்றி, நாம் நம்பினதற்கு மாறாகக் கேள்விப்பட நேரிடும். இன்னும் சில நேரங்களில், சில குடும்பத்துப் பிள்ளைகளைப் பார்த்தால் பரவாயில்லையே, பெற்றோர்கள் இவர்களை நன்றாக வளர்த் திருக்கிறார்கள்; மிகவும் ஒழுக்கமாக இருக்கிறார்களே என்று பெருமைப்படச் சொல்லும். ஆனால், கொஞ்ச காலம் கழித்து அவர்கள் சுயரூபம் வெளியே வரும்போது, இதுவும் போச்சா, என்று அவர்களைக் கண்டாலே ஒதுங்கிப் போகச் சொல்லும். இதுதான் இன்றைய கிறிஸ்தவத்தின் பிழையேதுமில்லாத பிரதிபலிப்பு.

அன்பானவர்களே, நான் இப்படியெல்லாம் சொல்வதற்காக நீங்கள் என்மீது சங்கடப்பட வேண்டாம். திறந்த மனதோடு சுற்றிலும் என்ன நடக்கிறதென்பதைக் கவனித்துப் பார்த்து, நான் சொல்லுவது ஓரளவுக்காகிலும் சரியா, இல்லையா என்று பாருங்கள். உண்மை உங்களுக்கே தெரியும்.

நாம் கர்த்தரின் பக்கமா அல்லது அவரது எதிராளியாகிய பிசாசின் பக்கமா என்று தெரியாத ஒரு கிறிஸ்தவ வாழ்க்கை வாழக்கூடாது. இந்த பென்யமீன் கோத்திரத்தார் அப்படிப்பட்ட வர்களாயிருக்கவில்லை. யார் பக்கம் தாங்கள் நிற்கிறோம் என்பதைத் தங்கள் சொல்லாலும், செயலாலும் நிரூபித்துக் காட்டினார்கள்.

நம்முடைய ஆன்மீக வாழ்க்கையில் நாம் யார் பக்கம் என்பதைத் தெளிவாக்காத ஒரு பக்தி வாழ்க்கையை தேவன் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளுவதில்லை. மாத்திரமல்ல, அதை அவர் கடுமையாகக் கண்டிக்கிறார். ஆசியாவிலிருந்த ஏழு சபை களில் ஒன்றாகிய லவோதிக்கேயருக்கு, யோவானைக் கொண்டு சொல்லிய போது, "உன்கிரியைகளை அறிந்திருக்கிறேன். நீ குளிருமல்ல அனலுமல்ல; நீ குளிராயாவது அனலாயாவது இருந் தால் நலமாயிருக்கும். இப்படி நீ குளிருமின்றி, அனலுமின்றி வெதுவெதுப்பாயிருக்கிறபடியினால் உன்னை என் வாயினின்று வாந்தி பண்ணிப்போடுவேன்" என்றார் (வெளி. 3:16) பழைய ஏற்பாட்டிலே, இஸ்ரவேலைப் பாங்காக வழிநடத்தின

யோசுவாவும், இதையே தான் சொல்லியுள்ளார். "கர்த்தரைச் சேவிக்கிறது உங்கள் பார்வைக்கு ஆகாததாய் கண்டால் பின்னை யாரைச் சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்து கொள்ளுங்கள். நதிக்கு அப்புறத்தில் உங்கள் பிதாக்கள் சேவித்த தேவர்களைச் சேவிப்பீர்களோ? நீங்கள் வாசம் பண்ணுகிற தேசத்துக்குடி களாகிய எமோரியரின் தேவர்களைச் சேவிப்பீர்களோ நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம்" (யோசுவா 24:15) என்றான். இன்னும் ராஜாக்களின் நாட்களில் எலியா தீர்க்கனும், நீங்கள் எந்த மட்டும் இரண்டு நினைவுகளால் குந்திக் குந்தி நடப்பீர்கள். கர்த்தர் தெய்வமானால் அவரைப் பின்பற்றுங்கள். பாகால் தெய்வமானால் அவனைப் பின் பற்றுங்கள் என்றே கூறியுள்ளான் (1 ராஜா 18:21). ஆகவே, நாம் நம்முடைய பக்தி நிலையில் தெளிவுள்ளவர்களாயிருக்க வேண்டியது அவசியம்.

இந்த பென்யமீனைப் பற்றி நாம் கவனிக்க வேண்டிய இன்னொரு விஷயம், வசனம் 29-ல் உள்ளது, "..... அது வரைக்கும் அவர்களில் மிச்சமானவர்கள் சவுலின் குடும்பத்தைக் காப்பாற்றப் பார்த்தார்கள்" நியாயம் எது, நீதி எது என்று தெரிந்த பிறகு, தவறை விட்டு விட்டு, நீதியின் பக்கம் நின்றிருக்கிறார்கள். சவுல், தங்கள் கோத்திரத்தான் என்பதற்காக, நீதியோடு அவர்கள் சமரசம் செய்து கொள்ளவுமில்லை, நியாயத்தைக் கண்டும், காணாதவர்கள் போலிருக்கவுமில்லை. ஆனால், நாம் எப்படி? எது சத்தியம் என்பதை மணிக்கணக்காக, நாள் கணக்காக, வாரக் கணக்காக கேட்டுவிட்டு, ரொம்பவும் சாவகாசமாக, நீங்கள் சொல்வதெல்லாம் சரியாகத்தான் இருக்கிறது. ஆனால், இந்த ஊழியர் எங்க ஆளுங்க, அந்த ஐயா எங்க ஊருங்க, அந்த பாஸ்டர் எங்க ஏரியாக்காரருங்க என்று இப்படிப்பல "ங்க" களைச் சொல்லிவிட்டு, இப்போ என் நிலைமையை "நீங்களே யோசித்துப் பாருங்கள்" என்று போதித்தவர்களைப் பார்த்துச் சொல்லுகிறோம். அப்படித்தானே! இது எப்படி நியாயமாகும் என்பதை விட எப்படித்தான் நியாயமாகும்? சொல்லுங்களே.

அருமையானவர்களே, தயவு செய்து, தேவ காரியத்தில் நாம் சமரசம் செய்து கொள்ளவேண்டாம். உறவுக்காகவும், பழக்கத்திற்காகவும், ஊருக்காகவும் நாம் சத்தியத்தோடு சமரசம் செய்து கொள்ள வேண்டாம். மெய் சத்தியத்தை இடது கையி னாலே தூக்கி ஓர் ஓரத்திலே வைக்கவும் வேண்டாம். மாறாக, இந்தப் பென்யமீனர் போல, தெளிவுள்ளவர்களாயிருந்து, சத்தியத்தின் பக்கம் உறுதியோடு நிற்போம்.

### III. அணியைக் காத்து நின்று, வஞ்சனையில்லாமல் செயல்பட்ட செபுலோனியர் (12:33)

தாவீதுடைய சேனையின், செபுலோன் கோத்திரத்தாரிட மிருந்து நமக்குக் கிடைக்கின்ற பாடம், அவர்கள் ஒற்றுமையுடன் வஞ்சனையில்லாமல் செயல்பட்டார்கள் என்பது.

இந்த செபுலோன் கோத்திரத்தாரைக் குறித்துப் படிப்பதற்குப் பெரிதாக ஒன்றுமில்லையென்று நாம் இதுகாறும் எண்ணிக் கொண்டிருந்தோம் தானே! ஆனால், இவர்கள் யார் என்பதைக் கொஞ்சம் கவனியுங்கள். "செபுலோன் புத்திரரில் சகலவித யுத்த ஆயுதங்களாலும் யுத்தம் செய்கிறதற்கும், தங்கள் **அணியைக் காத்து நிற்கிறதற்கும் பழகி, வஞ்சனை செய்யாமல் யுத்தத்திற்குப்** போகத்தக்கவர்கள் ஐம்பதினாயிரம் பேர்" (1 நாளா. 12:33) இவர்களுக்கு மிகுந்த பெருமை சேர்க்கும் இரண்டு வார்த்தைகள், இவ்வசனத்தில் உள்ளது. முதலாவது அணியை காத்து நிற்பவர்கள், அதாவது, தனித்தனியாக அல்லாமல் ஓரணியில் நின்று ஒற்றுமையுடன் செயல்படுகிறவர்கள். இரண்டாவது, வஞ்சனை செய்யாதவர்கள். அதாவது ஏமாற்றத் தெரியாதவர்கள், நேர்மையானவர்கள்.

இதை வாசித்துக் கொண்டிருக்கும் உங்களைப் பார்த்து நான் ஒன்று கேட்கிறேன். நம்முடைய கண்களுக்குத் தெரிகின்ற கிறிஸ்தவத்தில், இந்த இரண்டு குணங்களையும் கொண்ட கிறிஸ்தவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள்? கிறிஸ்துவுக்காக, அவர் கட்டின ஒன்றான மெய் சபையின் வளர்ச்சிக்காக அணி உணர்வுடன் ஒற்றுமையாகவும், செயல்பட வேண்டும் என நினைப்பவர்கள் எவ்வளவு பேர் உள்ளனர்? கிறிஸ்தவர்களுக்கும், ஒற்றுமைக்கும் என்ன சம்பந்தமிருக்கிறது என்று கேட்கக் கூடிய நிலை சமுதாயத்தில் எப்படியோ தோன்றி விட்டதா? இல்லையா? ஒற்றுமையின்மையின் காரணமாக தங்களுக்குள் வரும் பிரச்சினைகளுக்கு, தங்கள் கைகளிலுள்ள வேத வசனங்களின்படி தீர்வு காண முடியாமல், கிறிஸ்தவம் நீதி மன்றப் படிகளில் ஏறி இறங்கிக் கொண்டிருக்கிறதா? இல்லையா? ஞாயிற்றுக்கிழமைகளில் கையிலே வேதாகமத்தை சுமந்து திரிகிற நம்மை, சுற்றிலுமிருக்கிற சமுதாயம் எப்படிப்பட்ட கண்ணோட்டத்தோடு நம்மைப் பார்க்கிறது? சொல்லுங்கள்.

இந்தக் கேள்விக்கான பதில் அவ்வளவு திருப்திகரமாக இல்லையென்று தானே எண்ணுகிறீர்கள். உங்கள் கருத்து, சரிதான். அப்படியானால், இந்த அவல நிலைக்கான காரணத்தைக் கண்டுபடிக்க கையிலே பூத கண்ணாடி வைத்துக் கொண்டு அலையத் தேவையில்லை. பளிச்செனத் தெரிகிற ஒரே காரணம், "ஒற்றுமையில்லாதது" தான். நன்றாக நினைவில் வைத்துக் கொள்ளுங்கள், செபுலோனியர் 50,000 பேர் ஒற்றுமையுடன் இருந்திருக்கிறார்கள். நம்மை வெட்கத்தில் ஆழ்த்துகிற விஷயமாக இது இருக்கிறது.

ஒற்றுமையை வலியுறுத்தி ஏராளமான வசனங்கள் நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. பவுலடியார், கொரிந்தியர்களுக்கு எழுதும் போது, "சகோதரரே, நீங்களெல்லாரும் ஒரே காரியத்**தைப் பேசவும், பிரிவினைகளில்லாம் ஏகமனதும், ஏக யோசனையுமுள்ளவர்களாய்ச் சீர்பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே**

உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன் என்கிறார். (1கொரி. 1:10) அதே பவுல் 2 கொரி. 12:18-ல் ஒரே ஆவியை உடையவர்களாய் ஒரே அடிச்சுவட்டில் நடக்கவேண்டுமென்று கூறுகிறார். இன்னும் பேதுரு அப்போஸ்தலன், கிறிஸ்தவர்கள், ஒருமனப்பட்டவர் களாகவும், சகோதர சிநேகமுள்ளவர்களாகவும், இணக்கமுள்ள வர்களாகவும் இருக்க வேண்டுமென்று கூறுகிறார் (1 பேதுரு 3:8). இவ்வளவு வேத வசனங்களை வைத்துக் கொண்டு நாம் ஒற்றுமையில்லாமல் இருக்கலாமா? இவ்விஷயத்தில் செபுலோன் புத்திரரிடமிருந்து நாம் பாடம் கற்றுக்கொள்வோம்.

இந்த செபுலோனியரிடம் நாம் கவனிக்க வேண்டிய இன்னொன்று அவர்கள் வஞ்சனையில்லாதவர்களென்பது. அதாவது, சொல்லுகிறபடி செய்கிறவர்கள். தாவீதின் சேனை வெற்றியடைந்ததற்கான காரணங்களில் பலமான காரணம், வஞ்சனையற்ற செபுலோனியர் போன்றவர்கள்.

ஏமாற்று இருக்கிற எந்த ஒரு இடமும் இருக்க வேண்டிய அளவில் இருக்காது. அது குடும்பமாக இருந்தாலும், சமுதாய மாக இருந்தாலும், தேசமாக இருந்தாலும் இதுதான் உண்மை. இதை நாம் கண் கூடாகவே பார்த்து வருகிறோம். இந்த உண்மை சபைக்கும் அப்படியே பொருந்தும்.

ஆகவே, ஒரு சபை, சத்தியத்தின்படியான சபையாக இருந்து, தனது ஊழியக் காரியங்களில் ஜெயம் அடைய வேண்டு மானால், அதன் அங்கத்தினர்கள் வஞ்சனை செய்யாதவர்களாக இருக்க வேண்டும். அது எப்படி என்கிறீர்களா? யாக்கோபு 1: 22-ஐப் படியுங்கள்!. "அல்லாமலும், நீங்கள் உங்களை வஞ்சியாத படிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள்" என்கிறார். ஆகவே நாம் செபுலோனியர் போல வஞ்சனையற்றவர்களாயிருப்போம். அதற்காக, திருவசனத்தை மாத்திரம் படிக்கிறவர்களாகவும், கேட்கிறவர்களாகவும், அதின்படி மாத்திரம் செய்கிறவர்களாக வும் இருப்போம்.

அன்பானவர்களே, தாவீதின் சேனை, இப்படிச் சிறப்பான குணங்கள் கொண்டு செயல்பட்டதால் கிடைத்த மிகப்பெரிய நன்மை பற்றி, அந்த 12-ம் அதிகாரத்தின், கடைசி வசனத்தின் இறுதிப்பகுதி, "இஸ்ரவேலில் மகிழ்ச்சியுண்டாயிற்று" என்று கூறுகிறது (1 நாளா. 12:40).

எப்பொழுது "மகிழ்ச்சி" வந்தது என்று பாருங்கள். இறுதியில் தான், ஆகவே நம்முடைய தனிப்பட்ட வாழ்க்கையிலும், குடும்ப வாழ்க்கையிலும், சபை வாழ்க்கையிலும் மகிழ்ச்சி உண்டாக வேண்டுமானால், தாவீதின் சேனை போன்ற குணாதிசயம் உள்ள வர்களாக இருக்கவேண்டுவது அவசியம். குறிப்பாக, நாம் பார்த்த காத்தியர் பேலவும், பென்யமீனர் போலவும் செபு லோனியர் போலவும் இருக்க வேண்டும். இருப்போமா?.

நீங்கள் அப்படியிருக்க தேவன் உங்களுக்கு உதவி செய் வாராக! ஆமென்!

ஜெபியுங்கள் ! பங்கு பெறுங்கள் !!

# பதினைந்தாம் வேனிற்கால வேதாகம முகாம்

மற்றும்

## " திருமறை தியானம் " நேயர்கள் &
## " திருமறை ஆசான் " வாசகர்கள் கருத்தரங்கம்

**இடம் :**

**YMCA வளாகம், ஏலகிரிமலை (வேலூர் மாவட்டம்)**

**நாள் : மே மாதம் 7,8,9 - 2012 (திங், செவ், புதன்)**

**சிறப்பம்சங்கள்**

- கோடையின் கொடுமையிலிருந்தும், வழக்கமான வாழ்க்கை முறையிலிருந்தும் விடுபட்டு, தேவ சமூகத்தில் காத்திருக்க ஓர் அருமையான வாய்ப்பு.
- தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வருகைதரும் பரிசுத்தவான்களோடு சங்கமிக்கும் சந்தர்ப்பம்.
- ஆன்மீக வளர்ச்சிக்கு வழிகோலும் தேவச் செய்திகள்.
- பக்திப் பரவசமூட்டும் பாடல்கள்.
- கோடை வாசஸ்தலம் – சமச்சீரான தட்ப வெப்பம்.
- வாலிபர்கள், பெண்கள், சிறுபிள்ளைகளுக்கென தனித்தனி வகுப்புகள்.
- குடும்பமாகவும், குழுவாகவும் தங்குவதற்கு தனித்தனி அறைகள்.
- பெண்களுக்கு தனி இடவசதி.
- சிறுபிள்ளைகளை உற்சாகப்படுத்த பரிசுகளுடன் கூடிய போட்டிகள்.

**உணவும், தங்குமிடமும் இலவசம்**


**பதிவுக் கட்டணம்**

**பெரியவர்கள் ரூ. 150 /- சிறியவர்கள் ரூ. 100 /-**

## கிறிஸ்துவின் சபை

288, தாராபுரம் ரோடு, காங்கயம் – 638 701.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

**குறிப்பு : சுமார் 400 பேர் மாத்திரமே தங்க இட வசதி உண்டு. ஆகவே M.O. செய்து முன் பதிவு செய்து கொள்ளுங்கள்.**



# ஏன் நாங்கள் நியாயத்தீர்ப்பில் விசுவாசம் வைக்கிறோம்?

**J.C. சோட்**

நியாயத்தீர்ப்பு நாள் என்று ஒன்று இருக்கு மென்று வேதாகமம் தெளிவாகப் போதிக்கிறது. அதன் பொருள், நாம் நம்மைப்பற்றியும், இந்த வாழ்க்கையில் நாம் பேசின, செய்த, எல்லாவற்றையும் குறித்தும் கணக்கொப்புவிக்க வேண்டும். பெரும்பாலான ஜனங்கள், தாங்கள் செய்தவைகளைக் குறித்து யாருக்காவது கணக்கொப்பு விக்க வேண்டும் என்கின்ற கருத்தை விரும்புவதில்லை. அவர்கள் தவறு செய்யும் போது, காவல் அதிகாரிகளுக்குப் பதில் சொல்ல விரும்புவதில்லை. அதுபோல, அரசாங்கத்திற்கு முறையாக வரி செலுத்துவதற்கான பொறுப்பை ஏற்க விரும்புவதில்லை. ஆனால், இவைகளெல்லாம் வாழ்வின் உண்மைகளாயிருக்கிறது. வேலை செய்பவர் முதலாளிக்குப் பதில் கொடுக்க வேண்டும்; பள்ளிக்கோ அல்லது கல்லூரிக்கோ செல்பவர்கள் தேர்வு எழுதியாக வேண்டும்; இராணுவத்தில் இருப்பவர்கள் தங்கள் உயர் அதிகாரி களுக்கு அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும். இப்படியாக, நம்முடைய வாழ்க்கையின் பல நிலைகளிலும் பொறுப்பாளி களாக இருக்கிறோம். நாம் முதலாளிகளாக, செல்வந்தர்களாக, அல்லது நாம் மரித்துப் போனவர்களாக இருந்தாலொழிய இப்பொறுப்புகளிலிருந்து நாம் தப்பித்துக் கொள்ள வழியே இல்லை. ஆனால், செல்வந்தர்கள், தேசங்களின் தலைவர்கள், இன்னுமாக உயிரோடிக்கிறவர்கள், மரித்தவர்கள் இப்படி எல்லோரும் ஒரு நாள் தேவனுடைய நியாயசனத்திற்கு முன்பாக நின்றே ஆக வேண்டும்.

எபிரெய எழுத்தாளர் இவ்விதமாகச் சொல்கிறார், "*அன்றியும், ஒரே தரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படை வதும், மனுஷனுக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே*" என்று (எபி. 9:27). ஆனால், நியாயத்தீர்ப்பு நாளில் யாரெல்லாம் அங்கே இருப்பார்கள்? இது சம்பந்தமாகப் பவுல் சொல்லும் வார்த்தை களைக் கேளுங்கள். "*ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும்*" (II கொரி. 5:10). அங்கே வெறுமனே ஒரு நியாயத்தீர்ப்பு மாத்திரமல்லாமல், அந்த நியாயசனத்திற்கு முன்பாக, நீதியுள்ள நியாயாதிபதியாகிய இயேசு கிறிஸ்து முன்பாக எல்லோரும் தோன்றி, சரீரத்தில் அவனவன் செய்த நன்மையான மற்றும் தீமையான காரியங்களுக்காக கணக்கு ஒப்புவிக்க வேண்டும்.

அத்தனே பட்டணத்து மக்களோடு பேசும் போது பவுல், "*அறியாமையுள்ள காலங்களை தேவன் காணாதவர் போலிருந் தார். இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள*

*மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார். மேலும், ஒரு நாளைக் குறித்திருக்கிறார், அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார், அந்த மனுஷனை மரித்தோலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப்பண்ணினார் என்றார்* " (அப். 17:30,31). தேவன் ஒரு நாளை நியமித்திருக்கிறார். அதிலே இந்த உலகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார் என்று சொல்வதை தயவு செய்து கவனியுங்கள். அதன் பொருள், தேவன் எல்லோரையும் நியாயந்தீர்ப்பார், அந்த நியாயத்தீர்ப்பு நீதியாயிருக்கும். அது நேர்மையற்ற முறையில் இருக்காது, நியாயத்தீர்ப்பில் தேவன் பட்சபாதம் காட்டமாட்டார் அல்லது அவர் பாரபட்சமாக நடந்து கொள்ளமாட்டார். அந்த நாள் எப்போது என்று நமக்குத் தெரியாது. ஆனால், தேவனுக்குத் தெரியும். கர்த்தருடைய வருகையும் அப்படித்தான். அந்த நாள் தேவதூதர்களுக்குக் கூடத் தெரியாது, பரலோகத்தில் இருக்கிற பிதாவுக்கு மட்டுமே தெரியும் என்று கர்த்தர் நமக்குச் சொல்லியிருக்கிறார். தேவ தூதர்களுக்குக்கூடத் தெரியாது, பிதாவுக்கு மாத்திரமே தெரியும் என்பது உண்மை யானால், மனிதன் எப்படி அறிந்து கொள்வான்? கிறிஸ்து மறுபடியும் எப்போது வருவார் என்பதும், நியாயத்தீர்ப்பு எப்போது நடைபெறும் என்பதும் நிச்சயமாக மனிதனுக்குத் தெரியாது. மேலும், தேவன் தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு இந்த உலகத்தை நியாயந்தீர்ப்பார் என்று நமக்குச் சொல்லப்பட்டிருக் கிறது. அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப்பண்ணினார்.

நிச்சயமாகவே, அந்த மனுஷன் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து. பவுல் பேலிக்ஸ்க்கு முன்பாக நின்றபோது, அவருக்கு பிரசங்கம் பண்ணினதாக நமக்குச் சொல்லப்பட்டிருக் கிறது. பேலிக்ஸ்சும், துருசில்லாளும், விபச்சாரத்தில் இருந்ததாக நமக்கு வசனம் சொல்கிறது. " *அவன் நீதியையும், இச்சையடக் கத்தையும், இனிவரும் நியாயத்தீர்ப்பையும் குறித்துப் பேசுகை யில் பேலிக்ஸ் பயமடைந்து: இப்பொழுது நீ போகலாம், எனக்குச் சமயமான போது உன்னை அழைப்பிப்பேன்* " என்றான் (அப். 24:25). பேலிக்ஸ் எவ்வகையான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருந்தான் என்பதை அறிந்த பவுல், பேலிக்ஸ் தன்னுடைய செயல்களுக்கெல்லாம் தேவனுக்கு பதிலளிக்க வேண்டுமென்று சொல்லி பேலிக்ஸை எச்சரிக்க தைரியமுடையவராய் இருந்தார். அப்பொழுது, பேலிக்ஸ் நடுங்கியதில் எந்த ஆச்சரியமும் இல்லை. அது அவனை பயமடையச் செய்தது. ஆயினும், அவன் பவுலுக்கு செவிகொடுக்காமல் பவுலிடம், இப்பொழுது நீ போகலாம், எனக்கு சமயம் கிடைக்கும்போது உன்னை அழைப் பிப்பேன் என்று சொல்லி அனுப்பியது மிகவும் துக்கமானது. நமக்குத் தெரிந்தவரை, பின்பு அவன் ஒரு போதும் பவுலை அழைத்ததாக இல்லாததால், அவன் அந்நிலையிலேயே மரித்தி ருக்க வேண்டும். எவ்வளவு பரிதாபம்!

எபிரெய எழுத்தாளர், " *யாவருக்கும் நியாதிபதியாகிய தேவன்* " என்று கூறுகிறார் (எபி. 12:23). அதன் பின்பு, எபி. 13:4-ல் " *விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாயும் விவாக*

*மஞ்சம் அசுசிப்படாததாயுமிருப்பதாக; வேசிக்கள்ளரையும், விபசாரக்காரரையும் தேவன் நியாயந்தீர்ப்பார்* ” என்று சொல்கிறார்.

மத்தேயு 25 -ஆம் அதிகாரத்தில் கிறிஸ்து இவ்விதமாகச் சொன்னார். “ *அன்றியும் மனுஷ குமாரன் தமது மகிமை பொருந்தினவராய்ச் சகல பரிசுத்ததூதரோடுங்கூட வரும்போது தமது மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பார். அப்பொழுது சகல ஜனங்களும் அவருக்கு முன்பாகச் சேர்க்கப்படுவார்கள். மேய்ப்பனானவன், செம்மறியாடுகளையும், வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரிக்கிறது போல அவர்களை அவர் பிரித்து செம்மறியாடுகளைத் தமது வலது பக்கத்திலும், வெள்ளாடுகளைத் தமது இடப்பக்கத்திலும் நிறுத்துவார்* ” இங்கே கர்த்தர் ஒரு நாளில் நடக்கப்போகிற நியாயத்தீர்ப்பை சித்தரித்துக் காட்டுகிறார். இது அவருடைய வருகையின் போது நடைபெறும். அப்பொழுது எல்லா தேசத்தாரும் எல்லா ஜனங்களும் அவருக்கு முன்பாக நிற்பார்கள். அப்போது, அவர் ஒரு மேய்ப்பன் வெள்ளாடு களையும், செம்மறியாடுகளையும் பிரிப்பது போல தீயவர்களி டமிருந்து நல்லவர்களைப் பிரிப்பார். அவருடைய வலது கையில் இருக்கும் செம்மறியாடுகள் நீதிமான்களை, கிறிஸ்தவர்களை, சபையை அடையாளப்படுத்துகிறது. இடது பக்கத்தில் இருக்கும் வெள்ளாடுகள், துன்மார்க்கமான, வஞ்சிக்கப்பட்ட உண்மை யில்லாத கிறிஸ்தவர்களைக் குறிக்கிறது. நியாயத்தீர்ப்பு முடிந்த பிறகு துன்மார்க்கர் அந்தப்படி இவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும், நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள் என்றும் வேத வசனம் சொல்கிறது (மத். 25:46).

இப்போது, நாம் இதுகாறும் பார்த்தவைகளைத் தொகுத்து, நாம் எவைகளைக் கண்டறிந்தோம் என்று தயவு செய்து கவனியுங்கள்.

1. தேவனுடைய நியாயத்தீர்ப்பு ஒரு நாளிலே வருகிறது. ஆனால், அது மரணத்திற்குப் பிறகு இருக்கும் அல்லது கர்த்தருடைய வருகையின் போது இருக்கும்.

2. அந்த மகா நாளில் எல்லோரும் இருப்பார்கள். இது வரை வாழ்ந்த எல்லா மக்களும், இனிமேல் வாழப்போகிற மக்களும் அந்நாளில் அங்கே இருப்பதை கற்பனை செய்து பாருங்கள். ஒருவராலும் மறைந்து கொள்ளவோ அல்லது தப்பித்துக் கொள் ளவோ முடியாது. யாரும் கண்டு கொள்ளாமல் விடப்படமாட் டார்கள். இதில், இளம் வயதினரும், முதியோரும், நல்லோரும், தீயோரும், ஏழைகளும், பணக்காரரும், ராஜாவும், வேலைக் காரரும் என்று எல்லோரும் அடக்கம்.

3. தேவன் தம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவைக் கொண்டு நியாயந்தீர்ப்பார்.

4. அது ஒரு பாரபட்சமற்ற நியாயத்தீர்ப்பாய் இருக்கும். அதில் எல்லோரும் தங்கள் கிரியைகளின்படி, அது நன்மையாக இருந்தாலும் சரி, தீமையானதாக இருந்தாலும் சரி, அதன்படி நியாயந்தீர்க்கப் படுவார்கள்.

5. அந்த மகாநாளில், ஒவ்வொரு வெறுமையான வார்த்தையும், ஒவ்வொரு செயலும், அந்தரங்கமான ஒவ்வொரு யோசனையும் நியாயந்தீர்க்கப்படும்.

6. இந்த நியாயத்தீர்ப்பு இறுதியானதாக இருக்கும். அங்கே இரண்டாவது வாய்ப்புக்கு இடமேயில்லை. அது ஒரு நீதியுள்ள நியாயத்தீர்ப்பாயிருக்கும்.

7. அந்த நாளிலே, நீதிமான்களுக்கு நித்தியஜீவன் அளிக்கப்படும். துன்மார்க்கர் பிசாசின் நரகத்திலே நித்திய அழிவைப் பெறுவார்கள்.

நியாயத்தீர்ப்பிலே கர்த்தரை சந்திக்க ஆயத்தமாகிவிட்டீர்களா? கிறிஸ்து சொன்னதை நினைவில் கொள்ளுங்கள். "*என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும்* " (யோவான் 12:48). கிறிஸ்து இவ்விதமாகவும் சொன்னார் " *மரித்தோர் தேவ குமாரனுடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; அதைக் கேட்கிறவர்கள் பிழைப்பார்கள் என்று மெய்யாகவே, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில், பிதாவானவர் தம்மில் தாமே ஜீவனுடையவராயிருக்கிறது போல, குமாரனும் தம்மில் தாமே ஜீவனுடையவராயிருக்கும்படி அருள் செய்திருக்கிறார். அவர் மனுஷ குமாரனாயிருக்கிறபடியால், நியாயத்தீர்ப்புச் செய்யும்படிக்கு அதிகாரத்தையும் அவருக்குக் கொடுத்திருக்கிறார். இதைக் குறித்து நீங்கள் ஆச்சரியப்பட வேண்டாம்; ஏனென்றால், பிரேதக் குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும்; அப்பொழுது, நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள். நான் என் சுயமாய் ஒன்றுஞ் செய்கிறதில்லை; நான் கேட்கிறபடியே நியாயந்தீர்க்கிறேன்; எனக்கு சித்தமானதை நான் தேடாமல், என்னை அனுப்பின பிதாவுக்குச் சித்தமானதையே நான் தேடுகிறபடியால் என் தீர்ப்பு நீதியாயிருக்கிறது* " (யோவான் 5:25-30).

என் நண்பர்களே, நீங்கள் இயேசுவை விசுவாசித்து, உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்து இயேசுவிலுள்ள உங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு, பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறுவதின் மூலம், நீங்கள் இந்த நியாயத்தீர்ப்பின் மகாநாளுக்காக ஆயத்தமாக முடியும். அதைச் செய்யும்போது, கர்த்தர் உங்களை இரட்சித்து தம்முடைய சபையில் சேர்த்துக்கொள்வார். அதன் பின்பு, ஒரு கிறிஸ்தவனாக கர்த்தரை சேவித்து, அவருக்கு மரணபரியந்தம் உண்மையுள்ளவர்களாயிருந்தால், ஒரு நாளில் அவருக்கு முன்பாக நிற்கும்போது, கர்த்தர் உங்களைப் பார்த்து, நல்லது, உத்தமும், உண்மையுமுள்ள ஊழியக்காரனே, உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி என்று சொல்வதை உங்களால் கேட்க முடியும். அது எவ்வளவு அருமையானதாக இருக்கும்? இது குறித்து யோசித்துப் பாருங்கள். இன்னும் உங்களுக்கு நேரமும் வாய்ப்பும் இருக்கும் போதே அதற்காக ஆயத்தமாகுங்கள். நீங்கள் அப்படிச் செய்யும்படியாக நாங்கள் ஜெபிக்கிறோம்.

# நிழலும், நிஜமும்

*(The Shadow and the Reality)*

## Bro. ஜே.ஆ. ஜேம்ஸ் ராஜ்குமார்

அன்பானவர்களே,

சென்ற மாதத்தில், எருசலேம் சபையின் மூப்பரான யாக்கோபின் செய்தியைப் பற்றி கவனித்தோம். அவர் யோசேப்பு மரியாளின் குமாரன், நம்முடைய ஆண்டவரின் சகோதரன். இயேசு பிறந்த பிறகு யோசேப்பும் மரியாளும் ஏற்கனவே திட்ட மிட்டிருந்தபடியே (மத். 1:18) திருமணம் செய்து கொண்டு குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டு பிள்ளைகள் பெற்றெடுத்தார்கள். அவர் களில் மூத்தவர் யாக்கோபாக இருந்தார் என்று வேதாகமத்தில் அவர்களுடைய பிள்ளைகளின் பட்டியலைக் கொண்டு தீர்மானிக் கிறோம், மாற். 6:3. இந்த யாக்கோபுக்கு அடுத்தவர்களும் கூட சபைகளில் முக்கிய பொறுப்புகளில் அதாவது மூப்பர்களாக இருந்தார்கள் என்று முதலாம் நூற்றாண்டின் சரித்திர ஆசிரியர் களின் எழுத்துக்கள் கூறுகின்றன. அதில் யூதா என்பவர் மூப்பராக வும் யூதா புத்தகத்தை எழுதின ஆசிரியருமாக இருக்கிறார் என்றும் கூறுகிறது.

யாக்கோபு, அப். 15:18-ல் கூறும்போது, "உலகத்தோற்ற முதல் தேவனுக்குத் தம்முடைய கிரியைகளெல்லாம் தெரிந்திருக் கிறது", என்று கூறுகிறார். இந்த வசனம் நமக்கு ஒரு நல்ல போதனையை உண்டாக்குகிறது. தேவனுடைய கிரியைகளை நாம் கண்டுபிடித்து அவருடைய சித்தம் என்ன என்று அறிந்து அதில் நடக்க வேண்டும் என்பது ஆகும். உலகதோற்றம் முதல் இந்நாள் வரைக்கும் வெவ்வோறு காலங்களில் வெவ்வேறு மக்களுக்கு வெவ்வேறு திட்டங்களை, கிரியைகளை காண்பித்து அந்தத் திட்டங்களில், கிரியைகளில் அந்த மக்கள் தேவனுடைய சித்தம் அறிந்து தேவனுடைய கிரியைகளுக்கு ஒன்றி நடக்க வேண்டும் என்பதையே அவருடைய சித்தம் என்பதை இந்த வசனம் நமக்கு சுட்டிக்காட்டுகிறது. மேலும், இந்த நாட்களில் தேவன் தம்முடைய குமாரர் இயேசு கிறிஸ்துவின் மூலம் ஸ்தாபித்த புதிய ஏற்பாட்டின் மூலமாகவே இரட்சிப்பை பெற வேண்டும் என்பது அவருடைய சித்தமாயிருக்கிறது என்பதை இந்த வசனம் சுட்டிக்காட்டுகிறது. மேலும் இந்த நாட்களில் தேவன் தம்முடைய குமாரர் இயேசு கிறிஸ்துவின் மூலம் ஸ்தாபித்த புதிய ஏற்பாட்டின் மூலமாகவே உலகத்திற்கு கிரியை செய்கிறார். இந்த உலகம் புதிய ஏற்பாட்டின் மூலமாகவே இரட்சிப்பைப் பெற வேண்டும் என்பது அவருடைய சித்தமாயி ருக்கிறது என்பதை இந்த வசனம் சுட்டிக்காட்டுகிறது. மேலும்,

இன்றைக்கு தேவன் புதிய உடன்படிக்கையின் மூலமாக மட்டுமே மக்களை தம்மிடத்தில், தம் இராஜ்யமாகிய சபையில் சேர்த்துக் கொள்ளுகிறார். இதுவே இந்த நாட்களில் அதாவது கிறிஸ்துவின் காலத்தில் தேவனுடைய கிரியையாயிருக்கிறது என்பதையும் இந்த வசனம் நமக்குப் போதிக்கிறது. மேலும், அவர் அடுத்த வசனத்தில், "ஆதலால்" என்கிற ஒரு உறுதியான வார்த்தையை இங்கு பயன் படுத்துகிறார். அதன் அர்த்தம் இதன் காரணமாக அல்லது மேலே சொல்லப்பட்ட விளக்கங்களின்படி, "ஆதலால் புறஜாதிகளில் தேவ னிடத்தில் திரும்புகிறவர்களைக் கலங்கப்பண்ணலாகாதென்றும், (அப். 15:19). இந்த வசனமே ஒரு சரியான பாடத்தை பாதையை அல்லது இந்த காலத்தின் தேவனுடைய தீர்மானத்தை நமக்குத் திட்டப்படுத்துகிறது. பழைய ஏற்பாடாகிய நியாயப்பிரமாணத்தை கிறிஸ்தவர்கள் கைக்கொள்ள வேண்டும் என்கிற யூத சகோதரர் களின் கருத்து, ஆலோசனை அல்லது திட்டம் தேவனுடைய திட்டம் அல்ல என்பது இங்கே தெளிவுபடுத்தப்படுகிறது. ஏனென்றால், யாக்கோபின் வலியுறுத்தல் இதைத்தான் சொல்லுகிறது. இரண்டு உடன்படிக்கையையும் ஒரே நேரத்தில் அவர்களைக் கலங்கப் பண்ணுவது ஆகும். தேவனிடமாய் அவர்கள் சரியான முறையில் திரும்பாதபடிக்கு அவர்களை குழப்பிவிடுவது என்பது ஆகும். இப்படிப்பட்ட குழப்பத்தினால், கலக்கத்தினால் அவர்கள் தேவனிடம், தேவன் இந்நாளில் ஏற்படுத்தியிருக்கிற கிரியைகளில் அவர்கள் பங்கு பெறாமல், தேவன் திட்டமிடாத ஒரு இடத்திலே அவர்கள் சென்றுவிடும் வாய்ப்பையும், யூத சகோதரர்களின் போதனை அவர்களை கலங்கப்பண்ணுகிறது என்பதையும் இங்கு யாக்கோபு தெளிவுப்படுத்துகிறார்.

இன்னும் அவர் பேசி சொன்னது, "விக்கிரகங்களுக்குப் படைத்த அசுசியானவைகளுக்கும், வேசித்தனத்திற்கும், நெருக் குண்டு செத்ததிற்கும், இரத்தத்திற்கும், விலகியிருக்கும்படி அவர் களுக்கு நாம் எழுத வேண்டுமென்றும் நான் தீர்மானிக்கிறேன்" என்கிறார், (அப். 15:20) மேற்சொன்ன இந்த 4 நியமங்களும், நியாயப்பிரமாணத்தின் சட்டங்களாக இருந்தது என்பது மட்டுமல்ல பிதாக்களின் காலத்திலும் இந்த நியமங்கள் தேவனுடைய சித்தமா யிருந்தது. அதில் ஒன்று விக்கிரக வணக்கமும் அவைகளுக்குப் படைத்ததைச் சாப்பிடுவதும் ஆகும். ஒரு பொருள் அல்லது சாப்பாடு விக்கிரகத்துக்குப் படைத்துவிட்டால் அது அசுத்தமாகிறது என்று இந்த வசனம் சுட்டிக்காட்டுகிறது அதற்கு நாம் விலகியிருக்க வேண்டும். விசுவாசிகளின் தகப்பனாகிய ஆபிரகாம் விக்கிரக தேசத்திலே "ஊர்" என்கிற கல்தேய தேசத்திலே வாழ்ந்திருந்தாலும் அவருடைய இருதயம் தேவனுக்கு முன்பாக "உண்மையுள்ளதாயி ருந்தபடியினால்" தேவன் ஆபிரகாமை அவருடைய தீர்மானத்திற் காக தம் கிரியை நிறைவேற்றும்படியாக அழைத்தார். ஆபிரகாமின் இருதயம் உண்மையுள்ளது என்பது அவர் விக்கிரக ஆராதனையை ஏற்கவில்லை என்பதைக் காட்டுகிறது. ஆகையால், விக்கிரக

ஆராதனை என்பது உலக தோற்றம் முதல் தேவனுக்கு விரோதமான காரியம் என்பதற்கு ஆபிரகாமை உதாரணமாகக் கவனித்தோம்.

அடுத்து இரண்டாவதாக, வேசித்தனம் இதைக் குறித்து நமது ஆண்டவர் மத்.19:3-9 வசனங்களில் பரிசேயர்களோடு விவாதிக்கையில் தேவனுடைய சிருஷ்டிப்பிலேயே மனிதனுடைய குடும்ப வாழ்க்கை திருமண வாழ்க்கை திட்டமிடப்பட்டது என்பதை விவரித்து "ஒருவனுக்கு ஒருத்தி" என்பதை தெளிவுப்படுத்துகிறார். ஒன்றுக்கு மேற்பட்ட தாரம் அல்லது திருமணம் வேசித்தனம் ஆகும் என்பது சிருஷ்டிப்பிலேயே உணர்த்தப்பட்டிருக்கிறது.

மூன்றாவதும், நான்காவதுமான நெருக்குண்டு செத்தது புசிக்கக்கூடாது, இரத்தம் புசிக்கக்கூடாது இவை இரண்டும் இரத்தம் புசிக்கக்கூடாது என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. இது நோவாவுக்குத் தேவன் பேசும் போது, "மாம்சத்தை அதின் உயிராகிய இரத்தத்தோடே புசிக்க வேண்டாம்", என்று கட்டளையிட்டார் (ஆதி. 9:4). மேலும், இரத்தத்தில் சகல நோய்களும் குடி கொண்டிருக்கும் என்பதும் ஒரு காரணமாக இருக்கலாம். நெருக்குண்டு செத்தது என்பது இரத்தம் வெளியேறாமல் அடிபட்டு அல்லது அடிக்கப்பட்டுச் செத்தது என்பதாகும் அதைப் புசிக்கக் கூடாது. இந்த நியமங்கள் புதிய ஏற்பாட்டின் கிறிஸ்தவர்களுக்கும் பொருந்தும். ஆகையால், இவைகள் நியாயப்பிரமாண சட்டங் களாக அல்ல பொதுவான சட்டங்களாக மனிதனுடைய வாழ்க்கைக்கும் ஒழுங்குக்கும் ஆதிமுதலாய் இருந்ததை நியாயப் பிரமாணத்தில் தேவன் சேர்த்தார். புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவர்க ளுக்கும் கொடுக்கிறார்.

யாக்கோபு, அடுத்தது நியாயப்பிரமாணத்தைப் பற்றி சொல்லி, "மோசேயின் ஆகமங்கள் ஓய்வுநாள் தோறும் ஜெப ஆலயங்களில் வாசிக்கப்பட்டு வருகிறபடியால், பூர்வ காலந் தொடங்கிச் சகல பட்டணங்களிலும், அந்த ஆகமங்களைப் பிரசங் கிக்கிறவர்களும் உண்டே என்றான்", (அப். 15:21) யூதர்கள் நியாயப்பிரமாணத்தை மார்க்க சம்பந்தமான சட்டமாக மட்டுமல்ல தேச சட்டமாகவும் வாழ்க்கை நெறியின் சட்டமாகவும் மதித்து அவைகளை யூதேயாவில் மட்டுமல்லாமல் அவர்கள் வாழக் கூடிய சகல பட்டணங்களிலும் ஊர்களிலும் ஒரு கூடுமிடங்களை உருவாக்கி அங்கு ஓய்வு நாட்களில் (சனிக்கிழமைகளில்) கூடி போதித்தும் கேட்டும் வந்தார்கள். இப்படி நியாயப்பிரமாணம் அன்றைக்கு அவர்களால் போதிக்கப்பட்டு வந்தது, மேலும், நியாயபிரமாணம் அவர்களை கிறிஸ்துவினிடம் வழி நடத்துகிற ஒரு கருவியாக இருந்தது (கலாத். 3:24).

இங்கே நாம் ஜெப ஆலயம் என்கிற வார்த்தையைச் சற்று கவனிக்க வேண்டும். இந்த வார்த்தை மூலபாஷையான கிரேக்க மொழியில் "சினெகாக்" என்கிற வார்த்தை பயன்படுத்தப்

பட்டுள்ளது. இந்த வார்த்தையின் அர்த்தம் ஒரு நோக்கத்திற்காக கூடுகிற ஒரு இடம். கிரேக்கர்கள் சட்ட சபைக்கும் இதே வார்த்தையை பயன்படுத்தினார்கள். தமிழ் மொழி பெயர்ப் பாளர்கள் இதை ஆலயம் என்பதாக மொழி பெயர்த்தார்கள். எருசலேமிலுள்ள தேவனுடைய ஆலயம் தவிர வேறு ஒரு கட்டிடத்தை அல்லது இடத்தை தேவனுடைய ஆலயமாக ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். இந்த ஜெப ஆலயம் என்கிற இடங்களில் பலி செலுத்தப்படுவதில்லை. ஆகையால், அங்கு பிரதான ஆசாரியர்கள் தங்கள் பலி செலுத்தும் வேலைகளை இந்த ஜெப ஆலயங்களில் செய்யமாட்டார்கள். ஆகவே, இந்த "சினெகாக்" என்பது யூதர்கள் ஓய்வு நாளில் கூடி நியாயப்பிரமாணத்தைப் படித்து பிரசங்கித்து ஜெபித்து ஒருவேளை பாடி இப்படி தங்க ளுடைய தேவனுக்காக ஓய்வு நாளை செலவு செய்வார்கள். ஆகையால், இது ஆராதனை அல்ல ஜெப ஆலயமும் அல்ல யூதர்கள் கூடுகிற இடம் தான் என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இதைக் காரணமாக வைத்து தங்கள் கட்டிடங்களை மக்கள் தேவாலயமாக சொல்வது வேதத்திற்கு புறம்பானது.

யாக்கோபு பேசி முடித்ததும் அங்கு கூடியிருந்த அனைவருக்கும் ஒரு காரியம் தெளிவாயிற்று. மோசேயின் மூலமாகக் கொடுக்கப்பட்ட பழைய உடன்படிக்கையாகிய பழைய ஏற்பாட்டை கிறிஸ்தவர்கள் கடைபிடிக்க வேண்டிய அவசியம் இல்லை. இது எருசலேமிலிருந்த அப்போஸ்தலர்கள் மூப்பர்கள் சபையாருக்கு மாத்திரம் தெரிந்திருப்பது போதாது. ஆகையால், உலகம் முழுவதும் எங்கெல்லாம் கிறிஸ்தவர்கள் இருக்கிறார்களோ அங்கெல்லாம் இந்த சத்தியம் சொல்லப்பட வேண்டும் என்று தீர்மானம் செய்தார்கள். முதலாவது, அந்தியோகியாவிலிருந்து இந்த பிரச்சனை வந்தபடியால் அவர்களுக்கு எருசலேமில் நடந்தவைகளை விவரித்துச் சொல்லும்படியாக இரண்டு பேரை பவுலோடும், பர்னபாவோடும் அனுப்புவது என்று திட்டம் பண்ணினார்கள். "அவர்கள் யாரென்றால், சகோதரரில் விசேஷித் தவர்களாகிய பர்சபா என்று மறுபேர் கொண்ட யூதாவும், சீலாவுமே" (அப். 15:22).

பவுல், பர்னபா இருவருமே இந்தக் கடிதத்தைக் கொண்டு சென்றிருந்தால் அதை நம்ப முடியாது. எருசலேமில் நடந்தது என்ன என்பதைப் பற்றி சொல்ல சாட்சிகள் தேவை. ஆகையால், விசேஷ மான இரண்டு சகோதரர்களை சாட்சிகளாக அனுப்பினார்கள். அதுமாத்திரம் அல்ல இந்த விவாதத்திற்கு என்ன முடிவு அல்லது தீர்வு என்பதை ஒரு நிருபமாகக் கடிதமாக எழுதி அந்தக் கடிதத்தை அந்த 4 சகோதரர்கள் கையில் அப்போஸ்தலர்கள், மூப்பர்கள், சபையார் கொடுத்து அனுப்பினார்கள். "இவர்கள் கையில்" என்பது சவுல், பர்னபா, யூதா, சீலா ஆகிய நால்வர் கையில், "அவர்கள் என்பது அப்போஸ்தலர்கள், மூப்பர்கள், எருசலேம் சபையார் என்பது ஆகும்.

**(தொடரும்)**

## பெண்கள் பகுதி

# ஆதிப்பெண்கள்

**Sis. ரேச்சல் இராஜநாயகம்**

### அப். 1:14-ல் இடம் பெற்றிருக்கும் இந்த பெண்கள் யார்?

**கி**றிஸ்துவுக்குள் அருமையானவர்களே! இந்தப் பகுதியில் இடம் பெற்றுள்ள பெண்கள் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு ஊழியத்தில் தங்களை எவ்வாறு இணைத்துக் கொண்டார்கள் என்பது பற்றி படிப்போம்.

இவர்கள் பெயர்கள் இங்கே கொடுக்கப்படாவிட்டாலும், சுவிசேஷ நூல்களின் வாயிலாக இவர்கள் யாராக இருக்க முடியும் என்பதைக் கற்று யூக்கி முடியும். லூக். 8:2,3 வசனப்பகுதிகளில் அவர் பொல்லாத ஆவிகளையும், வியாதிகளையும் நீக்கிக் குணமாக்கின சில ஸ்திரீகளும், ஏழு பிசாசுகள் நீங்கின மகதலேனாள் என்னப்பட்ட மரியாளும், ஏரோதின் காரியக்காரனான கடசாவின் மனைவியாகிய யோவன்னாளும், சூசன்னாளும், தங்கள் ஆஸ்திகளால் அவருக்கு ஊழியஞ்செய்து கொண்டு வந்த மற்ற அநேக ஸ்திரீகளும் அவருடனே இருந்தார்கள் என்று வாசிக்கிறோம். மாற்கு 15:40,41 வசனங்களில், சில ஸ்திரீகளும் தூரத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர் கலிலேயாவிலிருந்த போது அவருக்குப் பின்சென்று ஊழியம் செய்து வந்த மகதலேனா மரியாளும், சின்ன யாக்கோபுக்கும், யோசேக்கும் தாயாகிய மரியாளும், சலோமே என்பவளும், வேறு அநேக ஸ்திரீகளும், சிலுவையினருகில் நின்றனர் என்று பார்க்கிறோம். யோவானில் பார்க்கும் போது இயேசுவின் சிலுவையினருகே அவருடைய தாயும், அவருடைய தாயின் சகோதரி கிலெயோப்பா மரியாளும், மகதலேனா மரியாளும் நின்று கொண்டிருந்தார்கள் (19:5). இயேசுவை சிலுவையில் அறைந்த பிறகும் இவர்களில் சிலர் கல்லறையில் காத்துக் கொண்டிருந்தார்கள். இயேசு உயிர்த்தெழுந்த செய்தியை ஓடிப் போய் வாரத்தின் முதல் நாளிலே சீஷர்களுக்கு அறிவித்தவர்களும் இவர்களே (லூக். 23: 55,56; 24:1-10). மகதலேனா மரியாள் கல்லறையில் நின்று அழுது கொண்டிருந்த போது இயேசு அவளுடனே பேசினார் (யோவான் 20:1,11-17).

அப்போஸ்தலர் முதலாம் அதிகாரத்தில், இந்த ஸ்திரீகள் சீஷர்களோடு சேர்ந்து ஒரு மனப்பட்டு, ஜெபத்திலும், வேண்டுதலிலும் தரித்திருந்தார்கள் (அப். 1:14).

சரி, இந்த ஸ்திரீகளிடமிருந்து நாம் என்ன பாடங்கள் கற்றுக் கொள்ளப்போகிறோம்?.

அப்போஸ்தலர் 1-ம் அதிகாரத்தில் பெயர்கள் தெரியப்படாவிட்டாலும் ஸ்திரீகள் என்று சொல்லும் போது இயேசுவோடு கூட ஊழியம் செய்த ஸ்திரீகள் தான். தேவனுடைய பார்வையில் ஆண்களுக்கு இரட்சிப்பு எவ்வளவு முக்கியமாய் இருந்ததோ அவ்வளவு முக்கியமாய் பெண்களுக்கும் இரட்சிப்பு அவசியமாய் காணப்பட்டது. இயேசுவின் தாயாகிய மரியாளோடு பெயர் சொல்லப்படாத ஸ்திரீகளும் எருசலேமில், இயேசுவின் இரத்தத்தோடு தொடர்பை ஏற்படுத்திக் கொண்டவர்கள். இவர்கள் தான் இரட்சிப்பைப் பெற்று சரித்திரத்தில் இடம் பெற்ற முதல் பெண்மணிகள். இன்றைக்கு வாழும் கிறஸ்தவப் பெண்களாகிய நமக்கு முன் உதாரணமாக திகழ்பவர்கள். இவர்களிடமிருந்து என்னத்தை நாம் கற்றுக் கொள்ளப்போகிறோம்?

### நம்பிக்கையான ஊழியக்காரிகள்

முதலாவது, இவர்கள் இயேசுவின் மேல் நம்பிக்கை வைத்து, இயேசு பரமேறினதிலிருந்து பெந்தெகொஸ்தே நாள் வரைக்கும் சீஷர்களோடு கூட சேர்ந்து காத்துக்கொண்டிருந்தார்கள். இந்த ஸ்திரீகள் இயேசுவின் ஊழிய நாட்களில் அவரோடு தங்களை இணைத்துக் கொண்டவர்கள். அவரிடமிருந்து குணம் பெற்ற சிலர், அதற்கு நன்றி தெரிவிக்கும் வகையில் அவரைத் தொடர்ந்து, அவருடைய வேலையில் அவருக்கு உதவியாய் இருந்தார்கள். சிலர் சிலுவை வரை சென்றனர். சிலர் கல்லறைக்குச் சென்றனர். அவர் சிலுவையில் மரித்த போது துக்கத்தோடு பார்த்தனர். பின்பு உயிரோடு எழுந்ததையும் பார்த்து மகிழ்ச்சியடைந்தனர்.

நாம் இவ்வாறு நம்பிக்கையோடு அவரை தொடர்கிறோமா? சிலுவைக்கும், கல்லறைக்கும் நம்முடைய நேரத்தை செலவு செய்கிறோமா? வேதத்தை வாசிப்பதன் மூலம் இயேசுவுக்கும், அப்போஸ்தலருக்கும் செவி கொடுக்கிறோமா? மரணம், உயிர்த்தெழுதல் ஆகியவற்றின் மேன்மையின் ஐசுவரியத்தை உணர்கிறோமா? அல்லது அடிக்கடி கேட்டுப் பழகிப் போன கதை தானேயென்று மெத்தனமாக எடுத்துக் கொள்கிறோமா?

இந்த அப். 1-ம் அதிகாரத்தில் இடம் பெற்ற ஸ்திரீகள் எதையுமே மெத்தனமாக எடுத்துக் கொள்ளவில்லை என்பது நமக்கு நன்கு புரிகிறது. சரித்திரத்தின் மிக முக்கியமான பகுதியில் தங்களை இணைத்துக் கொண்டார்கள். உலகம் முழுவதும் இரண்டில் ஒன்றை தேர்ந்தெடுக்கும் தருணத்தில் வெளிச்சமா அல்லது இருளா, தீமையா அல்லது நன்மையா என்ற நேரத்தில் இவர்கள் வெளிச்சம், நன்மையை தெரிந்து கொண்டார்கள். இவர்கள் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தார்கள்.

### ஜெபத்திலே தரித்திருக்கும் ஊழியக்காரிகள்

அப். 1:13,14-ல் வாசிக்கும் போது இவர்கள் ஜெபத்திலே தரித்திருந்தார்கள் என்று

பார்க்கிறோம். ஒருவேளை, ஆரம்பத்தில் இயேசு மரிக்கக் கூடாது, அநேகரின் எதிர்பார்ப் பின்படி அவர் பூமியில் இராஜா வாக ஆளுகை செய்ய வேண்டும் என்று ஜெபித்திருப்பார்கள். அவர்களின் ஜெபம் உயிரோடு எழுந்த இயேசுவைப் பார்த்த வுடன் நன்றியும், துதியும் கொண்ட ஜெபமாக மாறியிருந் திருக்கும். அவர் பரமேறிச் சென்ற பிறகு இயேசு சீக்கிரம் வர வேண்டும் என்று ஒருவேளை ஜெபித்திருக்கலாம். பவுலும் 1கொரி. 16: 22-ல் கர்த்தர் வருகிறார் என்று கூறுவதை பார்க்கிறோம்.

அவர்கள் எதிர்பார்த்தபடி இயேசு சீக்கிரம் வரவில்லை, உபத்திரவத்தினால் சபையானது சிதறப்பட்டபோது இயேசுவோ டிருந்த இந்த ஸ்திரீகள் எங்கெல் லாம் செல்கிறார்களோ அங் கெல்லாம் விசுவாசத்தோடு, ஜெபித்துத்தான் இருந்திருப்பார் கள் என்பது சந்தேகமேயில்லை. கர்த்தரோடிருப்பதையே விரும் பினார்கள்.

நாம் எவ்வளவு சீக்கிரம் ஜெபிக்கிறோம்? ஒவ்வொரு ஜெபத்திற்கும் இடையேயுள்ள கால அளவு எவ்வளவு? அவரு டைய நோக்கமும், செயல் பாடுகளும் நமக்கு புரியாத போது நாம் தேவனை துதிக்கி றோமா? உண்மையாலுமே கிறிஸ்து சீக்கிரம் வரவேண்டும் என்று விரும்புகிறோமா? அப். 1-ம் அதிகாரப் பெண்கள் போல் அதிக நேரம் ஜெபத்தில் கழிக்க விரும்புகிறோமா? நம்முடைய சௌகரியத்திற்கேற்ப செய்து கொண்டிருக்கிறோம் என்பதை நினைக்கும் போது பயத்தை ஏற்படுத்துகிறது. ஐயோ இயேசு நம்மோடு இல்லையே, அவர் சீக்கிரம் வர வேண்டும் என்று எதிர்பார்க்கும் அளவுக்கு இயேசுவோடு நமக்கு உறவு இல்லை என்பதுதான் உண்மை. நாம் அதிகம் ஜெபிக்கிறவர்க ளாக இருக்க வேண்டும்.

## வேற்றுமையில் ஒற்றுமையாய் இருந்தார்கள்

வேறுபட்ட பின்னணி யில் இருந்து வந்தவர்களெனி னும் கிறிஸ்துவுக்கம் ஒன்றாயி ருந்தார்கள்.

❖ இயேசுவின் தாயாகிய மரியாள், இச்சமயத்தில் ஒரு வேளை விதவையாயிருந்தி ருப்பார்கள். மிகவும் ஏழ்மை நிலையில் இருந்தார்கள்.

❖ மகதலெனா மரியாள் பிசாசு பிடித்தவர்களாயிருந்த படியினால் தீண்டத்தகாதவர்க ளாயிருந்தார்கள்.

❖ யோவன்னாளின் கணவன் ஏரோது அரண்மனையில் வேலை செய்தவனாயிருந்தான்.

❖ யாக்கோபு, யோவான் இவர்களின் தாய் மீன் பிடிக்கிற வனின் மனைவி.

கிறிஸ்துவின் மேல் நம்பிக்கை வைத்தபடியினால் இவர்கள் இணைக்கப்பட்டிருந் தார்கள். இயேசுவை பின் தொடர்ந்து செல்வதற்காக முந்தைய வாழ்க்கை முறையை விட்டு விட்டார்கள். கிறிஸ்து வை தவிர அவர்களுக்கு பொது வானது எதுவுமில்லை.

கிறிஸ்துவினால் நம்மு டைய உறவை கட்டிக் கொண்டி ருக்கிறோமா? எல்லாத் தரப்பு

பெண்களையும் தேடிச் செல்கிறோமா? நமக்குப் பாதுகாப்பு தரும் வகையில் ஒரு வட்டத்தைப் போட்டுக் கொண்டு வாழ்க்கையில் பிரச்சனைக்குரிய பெண்களை ஒரு போதும் கண்டுகொள்ளாமல் இருக்கிறோமா? நம்பிக்கையும், ஜெபிக்கும் பெண்கள் ஒன்று சேர்ந்து சபைக்காக வேலை செய்ய வேண்டும். சமுதாயத்தில் நம்முடைய செயல்பாடு தெரியாவிட்டாலும் பரவாயில்லை. கிறிஸ்துவுக்காக ஆத்துமாக்களை சேகரிப்பதில் நமக்கு தலைமைப் பங்கு இருக்க வேண்டிய அவசியமில்லை.

இந்த அப். 1-ம் அதிகாரப் பெண்கள் போல தாழ்மையாய், அமைதியாய், ஒருமனமாய், தேவன் அவர்கள் பெயரையும், நம் பெயரையும் அறிவார் என்ற எண்ணத்தோடு அவரை சேவிப்போம்.

பெரிய வழிகளிலும், சிறிய வழிகளிலும் தேவன் தங்கள் வாழ்வில் கிரியை செய்ய தங்களை அனுமதித்தார்கள். நாமும் நம் பிள்ளைகள், நண்பர்கள் இவர்களுக்கு கற்றுக் கொடுத்து, சேவை செய்யக் கூடிய தருணத்திற்காக ஜெபித்து, நன்மையினாலும், தீமையினாலும் அவரை துதிக்க கற்றுக் கொள்ள வேண்டும். கிறிஸ்துவுக்குள் நம்முடைய நோக்கம் என்ன என்பதை கண்டுபிடிக்க வேண்டும்.

இந்த ஆதிக்கிறிஸ்தவப் பெண்கள் போல் வாழ இன்றே முயற்சி எடுப்போம். கிறிஸ்து எப்போது வந்தாலும் அல்லது நாம் மரித்தாலும் அவரோடு இருக்க வேண்டும் என்ற ஆவலுடன் இந்த பூமியில் வாழ்வோம். நம்புவோம். ஜெபிப்போம். ஆமென்! ✻

## எரேமியாவின் எலும்புகளில் அக்கினி இருந்ததற்கான காரணங்கள்

1. எரேமியா தேவனிடத்திலிருந்து வந்த அழைப்பை ஒருபோதும் சந்தேகிக்கவில்லை.
2. எரேமியா தன்னுடைய ஜனங்களின் பாவத்தைக் குறித்து பாரமுடையவராக இருந்தார்.
3. எரேமியா இன்னல்கள், இடர்பாடுகள் மத்தியிலும் ஊழியத்தில் ஒப்புக்கொடுத்தலோடு இருந்தார்.
4. எரேமியா, தன்னுடைய பிரச்சனைகளை விட, சத்துருக்களை விட தேவன் பெரியவர் என்பதை அறிந்திருந்தார்.
5. எரேமியா, தான் ஊழியத்தைத் தவிர வேறு எதையும் செய்ய முடியாது என்பதை அறிந்திருந்தார்.

வாலிபர் பகுதி

# ஆவிக்குரிய உடற்பயிற்சி

## Bro. பென்னிமார்ட்டின்

பிரியமான வாலிப சகோதர சகோதரிகளே! உங்கள் யாவருக்கும் நசரேயனாகிய இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். உங்களில் பலர் தேர்வுகளை எழுதியிருப்பீர்கள், இன்னும் பலர் தேர்வு எழுதிக் கொண்டிருப்பீர்கள், இன்னும் பலரோ தேர்வுக்காக காத்துக்கொண்டிருப்பீர்கள். தேர்வில் வெற்றியை தேவன் தாமே உங்கள் அனைவருக்கும் தந்தருளுவாராக. மேலும், உங்களில் சிலர் கோடையின் கோரப்பிடியிலிருந்து தப்பித்து கோடை வாசஸ்தலங்களுக்குள் தஞ்சம் புகுந்திருப்பீர்கள். இக்கோடையில் உங்கள் நேரத்தை உலகப்பிரகாரமான காரியங்களில் வீணடிக்காமல் தேவனுக்கடுத்த காரியங்களில் ஈடுபட்டு உங்கள் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள். அடுத்த மாதம் ஏலகிரியில் நடைபெறும் வேனிற்கால வேதாகம முகாமில் கலந்து கொண்டு புத்துணர்வைப் பெற்றுக் கொள்ளலாம். பொதுவாகவே, வாலிபர்கள் தங்கள் சரீரத்தைப் பேணிக்காப்பதில் அதிக கவனம் செலுத்துவதுண்டு. உடலுக்குத் தேவையான சத்தான உணவை உட்கொள்வதிலும், உடலுக்கு தீங்கிழைக்கின்ற உணவுப் பொருள்களிலிருந்து விலகியிருப்பதிலும் அதிக அக்கறைப்படுவதுண்டு. சில வாலிபர்கள் ஒருபடி மேலே சென்று உடற்பயிற்சி செய்து தங்கள் உடலை கட்டுக்கோப்பாக வைத்துக்கொள்கிறார்கள். அப்படி உடற்பயிற்சி செய்வதில் எந்தத் தவறும் கிடையாது, அதனால் சரீரத்திற்கு பிரயோஜனம் இருக்கத்தான் செய்கிறது. ஆனால், சதா அதைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருப்பது ஆவிக்குரிய வளர்ச்சியில் மிகப்பெரிய சேதத்தை ஏற்படுத்தும் அப்போஸ்தலனாகிய பவுல் (1தீமோத். 4:8)-ல் "சரீர முயற்சி அற்ப பிரயோஜனமுள்ளது; தேவபக்தியானது இந்த ஜீவனுக்கும் இதற்குப் பின்வரும் ஜீவனுக்கும் வாக்குதத்தமுள்ளதாகையால் எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது" என்று புத்திமதி சொல்கிறார். இதனால், சரீர முயற்சி அற்ப அல்லது கொஞ்ச பிரயோஜனமுள்ளது என்பதை நாம் அறிந்து கொள்ள முடியும். இந்த வசனத்தில் பவுல் சரீரப்பிரகாரமான உடற்பயிற்சிக்கும், ஆவிக்குரிய பயிற்சிக்கும் இடையில் உள்ள ஒப்புமையைக் காட்டுகிறார். சரி, இப்போது சரியான ஆவிக்குரிய உடற்பயிற்சிக்கு என்னவெல்லாம் அவசியப்படுகிறது என்பதைத் தெரிந்துகொள்வோம்.

### I ஆயத்தம்

பொதுவாக, சரீரப்பிரகாரமான உடற்பயிற்சி செய்வதற்கு முதலில் நாம் ஆயத்தமாக வேண்டும். அதாவது, மனதில் உடற பயிற்சி செய்ய தீர்மானிக்க வேண்டும். பயிற்சியைத் தொடங்குவதற்கு விருப்பமிருக்க வேண்டும். அதைப்போலவே செயல்படுவதற்கும் ஆவல் இருக்க வேண்டும். ஆவிக்குரிய உடற்பயிற்சியிலும் இது உண்மையாயிருக்கிறது. 1பேதுரு 1:13-ல் "ஆகையால், நீங்கள் உங்கள் மனதின் அரையைக் கட்டிக் கொண்டு, தெளிந்த

புத்தியுள்ளவர்களாயிருந்து; இயேசு கிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்கு அளிக்கப்படும் கிருபையின் மேல் பூரண நம்பிக்கையுள்ளவர்களாயிருங்கள்" என்று வாசிக்கிறோம். எனவே, ஆவிக்குரிய உடற்பயிற்சிக்கு முன்பாக மனதளவில் நாம் ஆயத்தமாயிருக்க வேண்டும். மனதில் தீர்மானித்து ஆயத்தமான உடனே நாம் செயல்படத் தொடங்க வேண்டும். தேவனுடைய வார்த்தையை அனுதினமும் கேட்கிறோம். அவைகளை உள்வாங்கிக் கொண்டு கேட்டவைகளை நாம் நடைமுறைப்படுத்தும் போது ஆவிக்குரிய உடற்பயிற்சியைச் செய்கிறோம். அதேபோல், உடற்பயிற்சி என்று வரும்போது சில காரியங்களை திரும்ப திரும்ப செய்ய வேண்டும். ஆவிக்குரிய உடற்பயிற்சியில் எப்படி? சிறிய ஜெபத்தை செய்து விட்டு நாம் பக்தியாக இருக்கி றோம் என்று சொல்ல முடியாது, ஒன்றிரண்டு வசனங்களை வாசித்து விட்டு நாம் தியானிக்கிறோம் என்று சொல்ல முடியாது, அதே போல வாரத்தில் ஒருமுறை தேவனை ஆராதித்து விட்டு நாம் தேவனுக்கு உண்மையாக இருக்கிறோம் என்று சொல்ல முடியாது. சிலர் கிறிஸ்துவுக்குள் வந்ததும் ஆரம்ப நாட்களில் மிகவும் ஊக்கமாக ஜெபிப்பார்கள். ஆனால், பாடுகள் வரும் போது அப்படியே பின்வாங்கிப்போவார்கள். சரீரப்பிரகாரமான உடற்பயிற்சியை ஒருவர் தொடக்கத்தில் ஆர்வத்தோடு செய்து விட்டு சில நாட்களில் அதைத் தொடர்ந்து செய்யாதபோது சரீரத்திற்கு எப்படி பாதிப்பை ஏற்படுத்துகிறாரோ, அதேபோல் தான் ஒருவர் ஆவிக்குரிய உடற்பயிற்சியில் ஈடுபட்டுவிட்டு அதைத் தொடர்ந்து செய்யாமல் விட்டுவிட்டால் தன் ஆத்துமாவுக்கு பெருத்த சேதத்தை ஏற்படுத்துகிறார். விடாமுயற்சி இல்லாமல் உலகில் எந்த செயலிலும் ஜொலிக்க முடியாது. சரீரப்பிரகாரமான உடற்பயிற்சியில் கூட தொடர்ச்சி இல்லையென்றால் அது உடலில் பின் விளைவுகளை ஏற்படுத்தும், அப்படியிருக்கும் போது, ஆவிக்குரிய உடற்பயிற்சியில் தேவனுடைய வார்த்தைகளை அப்பியாசப்படுத்துவதில் தொடர்ச்சி இல்லையென்றால் அது ஆவிக்குரிய வளர்ச்சியில் தடைகளை ஏற்படுத்தும்.

## II எதிர்க்கும் திறன்

சரீரப்பிரகாரமான உடற்பயிற்சியில் பயிற்சி செய்ய முடியாதபடி அதற்கு தடைகள் ஏற்படும் போது அவைகளை எதிர்த்து தொடர்ந்து பயிற்சியில் ஈடுபட்டால் தான் உடற்பயிற்சியின் நன்மைகளை நாம் பெற்றுக்கொள்ள முடியும். இன்றைய நாட்களில் அநேக வாலிபர்கள் தங்கள் உடலைக் கட்டுக்கோப்பாக வைத்துக் 'கொள்ள வேண்டுமென்பதற்காக உடலை வருத்தி கடினமான பயிற்சியில் ஈடுபடுகிறார்கள். நாமும் ஆவிக்குரிய உடற்பயிற்சியில் அதாவது, தேவனுடைய வார்த்தைகளை கைக்கொள்ளும்போது பிசாசால் சோதனைகள் வரும் போது அவைகளை நாம் எதிர்த்து வீர நடை போட வேண்டும் அப்போது தேவன் சோதனைகளிலிருந்து தப்பித்துக் கொள்ளும் போக்கை உண்டாக்குவார் (1 கொரி. 10:13). நாம் தேவனுடைய சர்வாயுத வார்க்கத்தை எடுத்துக்கொண்டு அவைகளை எதிர்க்க வேண்டுமென்று கட்டளையிடப்பட்டிருக்கிறோம் (எபே. 6:13).

கிறிஸ்தவ ஜீவியத்தில் ஏற்படும் பாடுகள், உபத்திரவங்கள், சோதனைகள் போன்றவைகளை நாம் மேற்கொண்டு, தீங்கை எதிர்த்து நலமானவைகளை பற்றிக்கொண்டால் தேவ பக்தி யோடே ஆவிக்குரிய உடற்பயிற்சியில் ஈடுபட முடியும். நம் ஆவிக்குரிய வாழ்க்கையில் எதிர்ப்புகளோ, தடைகளோ இல்லை யென்றால் நாம் மெத்தனப் போக்கை கடைபிடித்து வளராமல் இருப்போம். கிறிஸ்தவ வாழ்க்கையில் நாம் அனுதினமும் வளர வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார். வேத வசனங்களில் நாம் பார்க்கும் போது எருசலேமிலுள்ள சபைக்கு துன்பம் உண்டானபோது அப்போஸ்தலர் தவிர, மற்ற யாவரும் சிதறப் பட்டுப்போனார்கள், சிதறிப்போனவர்கள் எங்குந்திரிந்து சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தார்கள், சபை வளர்ந்தது (அப். 8).

பிரியமான வாலிபக் கண்மணிகளே இதுகாறும் நாம் சரீரப் பிரகாரமான உடற்பயிற்சியை விடாது தொடர்ந்து செய்யும் போது அதன் நன்மைகளை அனுபவிக்கிறோம். ஆனால், சோம் பேறித்தனத்தாலோ, தடைகளினாலோ நாம் விட்டு விட்டால் அது பெருத்த சேதத்தை நம் உடலில் ஏற்படுத்துவதுபோல, ஆவிக்குரிய உடற்பயிற்சியிலும் அதாவது, வேத வசனங்களை வாசித்து, தியானித்து அவைகளை நடைமுறைப்படுத்தும் போது சோதனைகளினாலோ, தடைகளினாலோ, பாடுகளினாலோ நாம் அதை விட்டுவிட்டால் அல்லது பின்வாங்கிப்போனால் அது நம் ஆத்துமாவுக்கு பெருத்த சேதத்தை ஏற்படுத்தும், தேவனுடைய ஆத்துமா நம்மில் பிரியமாயிராது (எபி. 10:38) என்று கற்றுக் கொண்டோம். அவைகள் நீங்கள் ஆவிக்குரிய உடற்பயிற்சியில் ஈடுபட பிரயோஜனமாயிருக்கும் என்று நம்புகிறேன்.

## நாளும், நடப்பும்

1. மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு தனிநபர் அடையாள அட்டை வழங்கப்படும்.
2. இந்தியாவில் இருந்து கதிர்வீச்சு அபாயம். இலங்கை அச்சம்.
3. மே-1 முதல் ஸ்மார்ட் கார்டு மூலம் முதியோர் உதவித் தொகை வழங்கப்படும்படி முதல்வர் உத்தரவு.
4. இந்தோனேசியாவில் நிலநடுக்கம் இந்தியா உள்பட பல நாடுகளில் சுனாமி பீதி.
5. பன்றிக் காய்ச்சல் அச்சம் தேவையில்லை என சுகாதாரத்துறை அமைச்சர் அறிவிப்பு.
6. மே-15-க்குள் பள்ளிப்புத்தகங்கள் தயார் என தமிழக அரசு அறிவிப்பு
7. 5-வது ஐபியுல் கிரிக்கெட் போட்டி பரபரப்பாக நடந்து கொண்டிருக்கிறது.

சிறுவர் பகுதி

# 10 வாதைகளிடமிருந்து....

Bro. ABEL R. NAYAGAM

சிறு பிள்ளைகளே! இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். தேர்வுகள் முடிந்தது! கோடை விடுமுறையும் தொடங்கிவிட்டது!! மகிழ்ச்சியாக இருப்பீர்கள் நல்லது. அந்த மகிழ்ச்சியோடேகூட நாம் தேவனுடைய காரியங்களிலும் ஈடு பாடு காட்ட வேண்டும். இந்த கோடை விடுமுறை நாட்களிலும் தவறாமல் ஆராதனைக்குச் செல்ல வேண்டும். ஞாயிறு வகுப்பு களுக்குச் செல்ல வேண்டும். இப்படி செய்வீர்களானால், நிச்சயம் தேவன் உங்களில் பிரியமாயிருப்பார். ஏனென்றால், இந்த சிறுவயதிலேயே வேதாகம அறிவை பெறுவது அவசியம். சரி, பிள்ளைகளே! சிறுவயதிலேயே வோதகம அறிவைப் பெறுவது அவசியம். சரி, பிள்ளைகளே உங்கள் இன்ப நேரத்தை வீணாக் காமல் பாடத்திற்கு உங்களை அழைத்துச் செல்கிறேன்.

பழைய ஏற்பாட்டின் இரண்டாவது புத்தகமான யாத்தி ராகமம் புத்தகத்திலிருந்து ஒரு சம்பவம், தேவனுடைய ஜனங்கள் எகிப்திலே அடிமைத்தனத்திலிருந்த பொழுது, மோசேயை தேவன் நியமித்து, பார்வோனிடமிருந்து தம்முடைய ஜனங்களை விடுவித்து அழைத்து வந்தார். நான் இதை சுலபமாக சொல்லி விட்டேன். ஆனால், நீங்கள் நினைப்பது போல் அவ்வளவு சுலபமாக மோசேயால் ஜனங்களை எகிப்திலிருந்து விடுதலை மீட்டு வரமுடியவில்லை. காரணம் பார்வோன் ராஜா ஜனங்களை விடுதலை செய்ய மறுத்துக் கொண்டேயிருந்தான்.


தேவன் அப்பொழுது, கோபமடைந்து, வாதைகளை எகிப்திற்கு அனுப்பினார். ஆம், நீங்கள் ஞாயிறு வகுப்புகளில் கற்றுக்கொண்ட 10 வாதைகள் தான். சரி, உங்களுக்கு ஒரு கேள்வி! யோசியுங்கள். தேவன் நினைத்திருந்தால் பார்வோனை அழித்து ஜனங்களை சுலபமாக விடுதலை செய்திருக்க முடியும். இல்லையென்றால் வேறுபல வழிகளில் அதைச் செய்திருக்க முடியும். அப்படியிருக்க ஏன் வாதைகளை அனுப்பினார்? சொல்கிறேன், தொடர்ந்து படியுங்கள்.

பார்வோனும், அவன் தேசத்து ஜனங்களும் தங்களுக் கென்று அநேக தெய்வங்களை வைத்துக்கொண்டு, அவைகளை சேவித்து வந்தார்கள். உதாரணமாக, நைல் நதிக்கு, சூரியனுக்கு, செழிமைக்கு, தானியத்திற்கு இப்படி பல தெய்வங்களை உருவாக்கி வணங்கி வந்தார்கள்.

சரி, இதற்கும், தேவன் அனுப்பின வாதைகளுக்கும் என்ன சம்பந்தம்? சம்பந்தம் இருக்கிறதே; தேவன் அனுப்பின வாதைகள் அந்த ஜனங்கள் வணங்கி கொண்டிருந்த அந்த உயிரில்லாத

தெய்வங்களுக்கு எதிராகத்தான்! ஆச்சரி யமாக இருக்கிறதல்ல வா? நம் தேவனின் ஞானம், பராக்கிரமம் இந்த வாதைகளின் மூலம் நாம் அறிய முடியும்.

| வ. எண் | எகிப்தியரின் தெய்வம் | எதற்கான தெய்வம் | தெய்வத்திற்கு எதிரான வாதை |
|---|---|---|---|
| 1 | ஹப்பி **(HAPI)** | நைல் நதி | தண்ணீர் இரத்தமாக மாறுதல் |
| 2 | ஹேக்காத் **(HEKAT)** | செழிமை நிலவளம் | தவளைகளால் பூமியை நிரப்புதல் |
| 3 | ஒசிரிஸ் **(OSIRIS)** | தானிய வளம் | கல் மழையைக் கொண்டு அழிவு |
| 4 | ரா **(RA)** | சூரிய தெய்வம் | அந்தகாரம் |



யாத் 12:12ல் எகிப்து தேவர்களின் மேல் நீதியை செலுத்துவேன் நானே கர்த்தர் என்று கூறுகிறார். இப்படிச் செய்ததின் மூலம் தாங்கள் நம்பிக் கொண்டிருந்த தெய்வங்கள் இல்லவே இல்லை, அவைகளால் ஒன்றும் செய்ய இயலாது என்று எகிப்தியர்களும், பார்வோனும் உணர வைத்தார். எகிப்தியர் தெய்வம் என்று நினைத்து வணங்கி வந்த தெய்வங்கள் ஒன்றாகிலும் நம் தேவன் அனுப்பின வாதைகளை எதிர்த்து நிற்கவில்லை. ஏனென்றால், அவைகள் வெறும் விக்கிரகங்களே! உயிரற்றவைகள்.

இதற்குப் பின்னரே பார்வோன் தேவனுடைய ஜனங்களை விடுதலை செய்தான். ஜீவிக்கின்ற நம் தேவன் வென்றார். இந்த தேவன் தான் நம்முடைய தேவன். உங்களை நேசிக்கிறவரும், காக்கிறவரும் இவர் தான். படிக்கும் போதே உற்சாகமாகவும், தைரியமாகவும் இருக்கிறதல்லவா? அந்த தேவன் சிறுபிள்ளைகளாகிய உங்களை அதிகமாய் நேசிக்கிறார். அவருக்கு பயந்து, பிரியமாய் வாழ்ந்து நம்முடைய நன்றியை தெரிவித்தால் தானே அவர் சந்தோஷப்படுவார்? அப்படி வாழ்வீர்களா? வாழுங்கள் தேவன் உங்களை ஆசீர்வதிப்பார்.

மனன வனசம் : மாற். 10:27

# வசன ரீதியான கிறிஸ்துவின் சபை

## பாடம் - 18 சபையில் பெண்களின் கடமை

**Bro. K. பாஸ்கர்**

அன்பான வாசகர்களுக்கு,

உங்கள் அனைவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே வாழ்த்துக்கள். மீண்டுமாக இந்தத் தொடர்கட்டுரையின் மூலமாக உங்கள் அனைவரையும் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. வசன ரீதியான கிறிஸ்துவின் சபையை அறிந்து கொள்ள முக்கியமான பாடமான "சபையில் பெண்களின்" கடமையைக் குறித்துப் படிப்போம். ஏனென்றால், இன்று பெண்கள் சபையில் ஊழியம் செய்வதும், தீர்க்கதரிசனம் உரைப்பதும் மற்றும் அந்நிய பாஷை பேசுதலும் பெண்களின் கடமை என்று அநேகர் போதிக்கின்றனர். ஆனால், தேவன் பெண்களுக்கு இப்படிப்பட்ட கடமைகளைக் கொடுத்திருக்கிறாரா இல்லையா என்பதை நாம் அறிந்து கொண்டு தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிவோமாக!.

### I. சபையில் பெண்கள் முக்காடு போடவேண்டும்

தேவனுடைய சிருஷ்டிப்பில் ஸ்திரீயானவள் மென்மையாகவும், அச்சம், மடம், நாணம் போன்ற குணநலன்களோடு படைக் கப்பட்டிருக்கிறாள். முக்காடு என்பது இந்த குணநலன்களை எடுத்துக் கூறுவதாக இருக்கின்றது. உதாரணமாக பழைய ஏற்பாட்டில் பரிசுத்த ஸ்திரீயான ரெபெக்காள் என்ற அழகான, ரூபவதியான அந்தப் பெண் ஈசாக்கு என்ற ஆண் மகனுக்கு மனைவியாக நிற்கும் போது தன் தலையின் மேல் முக்காடு போட்டுக் கொண்டு தன்னுடைய அடக்கத்தை வெளிப்படுத்தினாள் (ஆதி. 24:64-67). அழகு இருக்கும் இடத்தில் ஆணவம் இருக்கும் என்று அநேகர் கருதுவார்கள். ஆனால், ரெபெக்காளுக்கு அழகும் இருந்தது. அதே சமயத்தில் அடக்கமும் இருந்தது. ஏனென்றால், தேவனுக்குப் பயப்படும் பெண்ணாக இருந்தபடியால் அகங்காரம், ஆணவம் இல்லை. வேதம் கூறுகின்றது சௌந்தரியம் வஞ்சனையுள்ளது அழகும் வீண் கர்த்தருக்குப் பயப்படுகிற ஸ்திரீயே புகழப்படுவாள். (நீதி. 31:30) இன்னும் ரெபெக்காளை புகழுகிறோம் என்றால் அவள் கர்த்தருக்குப் பயந்து முக்காடிட்டுக் கொண்டு தன்னுடைய அடக்கத்தை வெளிப்படுத்தினாள் என்பதற்காக.

இன்று ஸ்திரீகள் சபைக்கு வரும்போது பேண்ட், டீ-சர்ட் அணிந்து கொண்டு தங்கள் தலைமுடி அலங்காரத்தை வெளிப் படுத்திக் கொண்டு வருகின்றனர். அவர்கள் முக்காடு போடுவதில்லை (போட்டால் தலைமுடி அலங்காரம் களைந்து விடும் என்பதற்காக) அந்த சபை போதகரிடத்தில் கேட்டால் இது நவீன காலம், தவறு ஒன்றுமில்லை என்று சொல்லி விடுகிறார்கள். அன்பானவர்களே நவீன காலத்திற்கு ஒரு வேதாகமம் வேறு காலத்திற்கு ஒரு வேதாகமம் என்று தேவன் கொடுக்க வில்லை. எல்லா காலத்திற்கும் பொருந்தும்படியாகத்தான் தேவன் ஒரே ஒரு

வேதாகமத்தைத்தான் கொடுத்துள்ளார். அதுவே நமக்கு, சபை போதனைக்குரிய சட்டப் புத்தகம் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும் (II தீமோ. 3:16,17).

ஸ்திரீகள் சபையில் முக்காடு போட வேண்டும் என்று அப்போஸ்தலன் பவுல் மூலமாக பரிசுத்த ஆவியானவர் கூறுகின்றார். ஜெபம்பண்ணுகிறபோதாவது தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறபோதாவது தன் தலையை மூடிக்கொள்ளாதிருக்கிற எந்த ஸ்திரீயும் தன் தலையைக் கனவீனப்படுத்துகிறாள் அது அவளுக்குத் தலை சிரைக்கப்பட்டதுபோலிருக்குமே. ஸ்திரீயானவள் முக்காடிட்டுக்கொள்ளாவிட்டாள் தலைமயிரையும் கத்தரித்துப் போடக்கடவள். தலைமயிர் கத்தரிக்கப்படுகிறதும், சிரைக்கப்படுகிறதும் ஸ்திரீக்கு வெட்குமானால் முக்காடிட்டுக் கொண்டிருக்கக்கடவள் (1 கொரி. 11:5,6) மேலும், இந்த வசனப்பகுதியில் முக்காடு போட வேண்டும் என்று சுமார் ஐந்து முறை ஆவியானவர் கூறியிருக்கின்றார் என்பதைக் கவனிக்கவும் (1 கொரி. 11:5-11). ஆகையால், தூதர் களினிமித்தம் ஸ்திரீயானவள் தலையின் மேல் முக்காடு போட்டுக் கொள்ள வேண்டும்.

## II. சபையில் ஸ்திரீகள் அமைதலாயிருக்க வேண்டும்

அமைதியின் பிறப்பிடமாக ஸ்திரீகள் இருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். அதற்கு மாறாக வாயாடியும், சண்டைக்காரியுமாக இருக்கக்கூடாது. வேசி வாயாடியும், அடங்காதவளும் அவள் கால் வீட்டில் தரித்திருக்கிறதுமில்லை. (நீதி. 7:10,11). சண்டைக்காரியும், கோபக்காரியுமான ஸ்திரீயுடன் குடியிருப்பதைப் பார்க்கிலும் வனாந்தரத்தில் குடியிருப்பது நலம் (நீதி. 21:13) ஸ்திரீகள் வீட்டில் அமைதலோடு இருப்பது நல்லது (நீதி 17:1). ஆனால், இன்று அநேக ஸ்திரீகள் வீட்டைக் கவனிக்காமல் ஊழியம் என்ற பெயரில் வீடு, வீடாகத் திரிகிறார்கள். இதனால், அவர்களின் நடத்தை மோசமாகிவிடுகிறது. ஆகையால், தேவ வசனம் தூஷிக்கப்படாதபடிக்குப் பாலிய ஸ்திரீகள் தங்கள் புருஷரிடத்திலும், தங்கள் பிள்ளைகளிடத்திலும் அன்புள்ளவர்களும் தெளிந்த புத்தியுள்ளவர்களும், கற்புள்ளவர்களும் வீட்டில் தரித்திருக்கிறவர்களுமாக இருக்க வேண்டும் (தீத்து. 2:4,5).

வீட்டில் அமைதலாயிருக்கிற ஸ்திரீகள் சபையிலும் அமைதலாயிருப்பார்கள். வீட்டில் அடங்காத ஸ்திரீகள் சபையிலும் அடங்கமாட்டார்கள். உதாரணமாக பழைய ஏற்பாட்டில் ஆகாப் ராஜாவின் மனைவி யேசபேல்! (1 இராஜா 21:25) அவள் அடங்காமல் கர்த்தருடைய தீர்க்கதரிசிகளைக் கொன்று எலியா தீர்க்கதரிசிக்கு எதிர்த்து நின்றாள். அவளுக்குப் பயந்து வனந்தரத்திற்கு ஓடிப்போய்விட்டார் (1 இராஜா 18:1-4) இவள் இஸ்ரவேல் தீர்க்கதரிசிகளுக்கு வாயடியும், சண்டைக்காரியும், கோபக்காரியும், அடங்காதவளுமாயிருந்தாள். இந்த யேசபேலைப் போன்ற குணம் கொண்டவர்கள் சபையிலும் இருப்பார்கள் என்று வேதம் எச்சரிக்கிறது (வெளி. 2:20).

எனவே, இயேசு கட்டின சபையில் ஸ்திரீகள் அமைதலாயிருக்க வேண்டும் என்று தேவன் கட்டளையிட்டிருக்கிறார். சபைகளில் உங்கள் ஸ்திரீகள் பேசாமலிருக்கக்கடவர்கள் பேசும்படிக்கு அவர்களுக்கு உத்தரவில்லை அவர்கள் அமர்ந்திருக்ககடவர்கள்

பேசும்படிக்கு அவர்களுக்கு உத்தரவில்லை அவர்கள் அமர்ந்திருக்க வேண்டும் வேதமும் அப்படியே சொல்லுகிறது. அவர்கள் ஒரு காரியத்தைக் கற்றுக்கொள்ள விரும்பினால் வீட்டிலே தங்கள் புருஷரிடத்தில் விசாரிக்கக்கடவர்கள். ஸ்திரீகள் சபையிலே பேசுகிறது அயோக்கியமாயிருக்குமே ஸ்தீரியானவள் எல்லாவற்றிலும் அடக்கமுடையவளாயிருந்து அமைதலோடு கற்றுக்கொள்ளக்கடவள் உபதேசம் பண்ணவும், புருஷன்மேல் அதிகாரஞ் செலுத்தவும் ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை. அவள் அமைதலாயிருக்க வேண்டும். என்னத்தினாலெனில், முதலாவது ஆதாம் உருவாக்கப்பட்டான். பின்பு ஏவாள் உருவாக்கப்பட்டாள். மேலும், ஆதாம் வஞ்சிக்கப்படவில்லை. ஸ்திரீயானவளே வஞ்சிக்கப்பட்டு மீறுதலுக்கு உட்பட்டாள். அப்படியிருந்தும், தெளிந்த புத்தியோடு விசுவாசத்திலும், அன்பிலும், பரிசுத்தத்திலும் நிலைகொண்டிருந்தால் பிள்ளைப்பேற்றினாலே இரட்சிக்கப்படுவாள் (1கொரி. 14:34, 35; 1 தீமோ. 2:11-13) அதாவது, சபையில் அமைதலாயிருந்து தங்கள் பிள்ளைகளை விசுவாசத்தில் வளர்த்துவதே ஸ்திரீகளின் கடமையாக இருக்கிறது. அப்பொழுதுதான் பிள்ளைப்பேற்றினாலே இரட்சிக்கப்படுவாள்.

## III. சபையில் ஸ்திரீகள் கீழ்ப்படிந்திருக்க வேண்டும்

ஸ்திரீகள் வீட்டிலும் சரி, சபையிலும் சரி அவர்கள் கீழ்ப்படிந்திருக்க வேண்டும் என்று வேத வசனம் கூறுகின்றது. ஆகையால், சபையானது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறதுபோல மனைவிகளும் தங்கள் சொந்தப் புருஷர்களுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிருந்திருக்க வேண்டும். (எபே. 5:24) இப்படியே பூர்வத்தில் தேவனிடத்தில் நம்பிக்கையாயிருந்த பரிசுத்த ஸ்திரீகளும் தங்களுடைய புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்து தங்களை அலங்கரித்தார்கள் (1பேதுரு 3:5) கீழ்ப்படியாதிருக்கிற மதிகேடான அழகுள்ள ஸ்திரீ பன்றியின் மூக்கிலுள்ள பொன்மூக்குத்திக்குச் சமானம். கீழ்ப்படிதலுள்ள உள்ளான அழகையே தேவன் விரும்புகின்றார் (நீதி. 11:22).

புறம்பான அலங்கரிப்பான மயிரைப் பின்னி, பொன்னாபரங்களை அணிந்து உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக்கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல் அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள உள்ளான அலங்கரிப்பே தேவனுடைய பார்வையில் விலையேறப் பெற்றதாக இருக்கிறது (1பேதுரு. 3:3,4) புறம்பான அலங்கரிப்பு கீழ்ப்படியாமையை வெளிப்படுத்துகிறது. ஆனால், இன்று ஸ்திரீகள் சபைக்கு வரும்போது பேன்சி கடையைக் கொண்டு வருகின்றனர். மற்றவர்கள் பார்வைக்கு கவர்ச்சியாக உடை உடுத்துகின்றனர். இதெல்லாம் கீழ்ப்படியாமையை வெளிப்படுத்துகிறது. தகுதியான வஸ்திரத்தினாலும், நாணத்தினாலும், தெளிந்த புத்தியினாலும், தேவபக்தியுள்ளவர்களென்று சொல்லிக்கொள்ளுகிற ஸ்திரீகளுக்கு ஏற்றபடியே நற்கிரியைகளினாலும், தங்களை அலங்கரிக்க வேண்டும். இதுவே மெய்யான கீழ்ப் படிதலாகும் (I தீமோ. 2:10).

# உங்களை நடத்துகிறவர்களுக்கு கீழ்ப்படிந்து அடங்குங்கள்

**Bro. Glenn Colley**

"இந்நாட்களில் சபையில் மூப்பர் அல்லது கண்காணிப் பொறுப்பில் இருப்பவர்களின் அதிகாரம் பற்றி அதிகமாக விவாதம் நடந்து கொண்டு இருக்கிறது. சிலர் மூப்பர்களுக்கு அதிகாரம் எதுவுமில்லை. அவர்களுடைய தலைமைத்துவம் சிறந்த முன் மாதிரியை ஏற்படுத்துவதற்குத்தான் பொருந்தும் என்று நம்புகிறார்கள். வேறு சிலர் மூப்பர்கள் தாங்கள் கண்காணி களாக இருக்கும் சபையில் அங்கத்தினர்களின் ஆவிக்குரிய நலன் சம்மந்தமான முடிவுகளை எடுக்கும் அதிகாரம் மூப்பர்களுக்கு உண்டு என்று நம்புகிறார்கள். மேலும் சபை அங்கத்தினர்கள் மூப்பர்களின் தலைமைத்துவம் தேவனுடைய வார்த்தையோடு முரண்பாடாத வரை அதற்கு கீழ்ப்படிய கடமைப்பட்டிருக்கி றார்கள் என்று நம்புகிறார்கள்.

இந்தப் பாடத்தைப் பற்றி நீங்கள் ஆழ்ந்து யோசிக்கும் படியாக அநேக சுவாரஸ்யமான வசனப்பகுதிகள் காத்திருக்கின் றன. (I தீமோத் 3:1-7; தீத்து 1:5-11; அப் 20:28; I பேதுரு 5:1-4) நீங்கள் எபி. 13:17யையும் பரிசீலனை செய்து பார்க்கும்படியாக கேட்டுக்கொள்கிறோம். "உங்களை நடத்துகிறவர்கள், உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம் பண்ணுகிறவர்களாய் விழித் திருக்கிறவர்களாகபடியால், அவர்கள் துக்கத்தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதை செய்யும்படி அவர்களுக்கு கீழ்ப்படிந்து அடங்குங்கள்; அவர்கள் துக்கத்தோடே அப்படி செய்தால் அது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கமாட்டாதே". நாம் ஏதோ ஒருவருக்கு கீழ்ப்படிய வேண்டும் என கட்டளையிடப்பட்டிருப் பதை இந்த வசனத்திலிருந்து நாம் அறிகிறோம். இந்த வசனப் பகுதி சபையின் மூப்பர்களுக்கு கீழ்ப் படிவதைக் குறித்துப் போதித் தால் நேர்மையான இருதயங் களில் மூப்பர்களின் அதிகாரம் சம்மந்தமான குழப்பங்கள் என்றென்றும் இல்லாதபடி தீர்த்து வைக்கப்படும்.

இங்கே கீழ்ப்படிதல் என்கிற வார்த்தை கிரேக்கபதமான "பெய்தோ" விலிருந்து வந்திருக்கிறது. நேயர் அகராதியின்படி "கட்டுதல்" என்று பொருள்படும். இந்த வசனப்பகுதியில் குறிப் பாக இது கவனித்தல், கீழ்ப்படிதல், இணங்குதல், ஒத்திருத்தல் போன்ற பொருட்களைக் கொடுக்கும்.

ஆனால் இந்த வசனப்பகுதி யின்படி கீழ்ப்படிய நாம் யார்? நம்மை நடத்துகிறவர்கள், நம் ஆத்து மாக்களுக்கு உத்தரவாதம் பண்ணுகிறவர்கள் யார்? நம்மை நடத்துகிறவர்களைப் பற்றி எபி.

13 ஆம் அதிகாரத்தில் வேறு இரண்டு வசனங்களில் குறிப் பிடப்பட்டிருக்கிறது. "தேவ வசனத்தை உங்களுக்குப் போதித்து உங்களை நடத்தின வர்களை நீங்கள் நினைத்து, அவர்களுடைய நடவடிக்கை யின் முடிவை நன்றாய்ச் சிந்தித்து, அவர்களுடைய விசுவாசத் தைப் பின்பற்றுங்கள்" (வச. 7); "உங்களை நடத்துகிறவர்களை யும், பரிசுத்தவான்கள் யாவரை யும் வாழ்த்துங்கள்" (வச. 24).

அப். 20:28ல் எபேசு பட்ட ணத்து மூப்பர்களுக்கு புத்திமதி சொல்லும் போது இவ்வித மாகச் சொல்கிறார். "ஆகை யால் உங்களை குறித்தும் தேவன் தம்முடைய சுயரத்தத்தி னாலே சம்பாதித்துக் கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களை கண் காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங் குறித்தும் எச்ச ரிக்கையாயிருங்கள்". மூப்பர் கள் சரியாக கண்காணிகள் என்று விவரிக்கப்படுவார்கள், மற்றவர்களால் செய்யப்படும் வேலைகள் சரியான முறையில் செய்யப்படுகிறதா என்று கண் காணிக்கும் பொறுப்பு மூப்பர் களுக்கு கொடுக்கப்பட்டிரு கிறது. புதிய ஏற்பாட்டு சபை யில் மூப்பர்கள் அவ்விதமாகத் தான் விவரிக்கப்படுகிறார்கள்.

மூப்பர்கள் மந்தைக்கு மாதிரியாக இருப்பதன் மூலம் வழிநடத்தினாலும் (I பேதுரு 5:3) அவர்கள் கண்காணிக ளாக இருந்தும் நம்மை வழி நடத்துகிறார்கள். மந்தையில் அங்கத்தினர்களாக இருக்கும் நாம் அவர்களுக்கு கீழ்ப்படிய வேண்டும். இந்த போதனைக்கு விதிவிலக்காக நாம் நடந்து கொள்வது தேவனுடைய வார்த்தைக்கு முரண்பட்டதா யிருக்கும் (அப் 5:29) "மனுஷ ருக்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும் தேவனுக்கு கீழ்ப் படிகிறதே அவசியமாயிருக் கிறது (எபி. 13:17) மந்தைக்கு கண்காணிகளாக இருக்கும் சபையின் மூப்பர்களைத் தான் தெளிவாக குறிப்பிடுகிறது".

தேவபக்தியுள்ள மூப்பர்க ளுக்காக நாம் தேவனுக்கு நன்றி சொல்ல வேண்டும். நம்மை நடத்துகிறவர்களை நினைக்கும் தாழ்மையுள்ள கிறிஸ்தவர்களாக இருப்போ மாக (எபி 13:7). நாம் அவர் களுக்கு கீழ்ப்படிந்து அடங்கு வோமாக (வச. 17). ஒரு நாளில் அந்த எக்காளச்சத்தம் முழங் கும் போது பிரதான மேய்ப்ப னாகிய கிறிஸ்து வரும் போது அவர் விட்டு சென்ற மந்தை யை எப்படி கண்காணித்தார் கள் என்பதைப் பற்றி மூப்பர் கள் அவரிடம் கணக்கொப்பு விக்க வேண்டும் (I பேதுரு 5:4). எனவே மூப்பர் தங்கள் பணி யைத் திறம்பட செய்ய நாம் அவர்களுக்கு கரம் கொடுப்ப பேமாக. அப்போது அவர்கள் துக்கத்தோடே அல்ல, சந்தோ ஷத்தோடே அதைச் செய்ய வேண்டும். ✻

நமக்கிருக்கும் மிகப் பெரிய ஆபத்து, நம் இலக்கு உயர்வாக இருந்து அதை அடையத் தவறி விட்டோம் என்பதில் இல்லை. மாறாக, இலக்கு தாழ்வாக இருந்து அதை அடைந்து விட்டோம் என்பதில் தான் இருக்கிறது.

# BIBLE MEDITATION

## TV PROGRAM

TAMILAN TV - Saturday 7.15 am.

POTHIGAI TV - Sunday 5.30 am.

TAMILAN TV - Monday 7.00 am.

**கிருபையுள்ள வார்த்தை** தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

பேச்சாளர் : **சகோ. பிலேமோன் ராஜா,** மதுரை.

| | | | |
|---|---|---|---|
| **பொதிகை TV** | சனி | காலை | 5:30 மணி |
| **தமிழன் TV** | ஞாயிறு | இரவு | 10:00 மணி |

**கிறிஸ்துவின் வசனம்** தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

பேச்சாளர் : **சகோ. அர்ச்சுனன்,** வத்தலக்குண்டு.


| | | | |
|---|---|---|---|
| தமிழன் | TV | திங்கள் | காலை 6:00 மணி |
| தமிழன் | TV | சனி | காலை 6:15 மணி |





**HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA**


| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday Thursday | 6.45 - 7.00 a.m. | Box. 3815 New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Monday to Friday | 5.30 - 5.45 | Box. 80 Kakinada - 533 001 | Joshua Gootam |
| TAMIL | Sunday Thursday Friday | 6.45 - 7.00 p.m. 5.45 - 6.00 p.m. 5.30 - 5.45 p.m. | Box. 8405 Bangalore-560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane, Behind Sanskrit College, Trivandrum-695 034 | P.K. Varghee |

Regd. News Paper RNI No. 4766/87- Postal regn. No. Erode/26/2012-2014
Posted at Erode HPO on 20/21 of Every Month.
Licensed to Post without pre payment No: TN / WR / ERD / 03 / WPP / 2012-2014










(தபால் செலவிற்கு பணம் அனுப்பி இந்நூல்களைப் பெற்றுக்கொள்ளலாம்)


# திருமறை தியானம்


## தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்


| | | | | | |
|---|---|---|---|---|---|
| பொதிகை | TV | [illegible] | காலை | 6:30 | மணி |
| தமிழன் | TV | [illegible] | காலை | [illegible] | மணி |
| தமிழன் | TV | [illegible] | காலை | [illegible] | மணி |

சர்வதேச தரத்தில், தலை சிறந்த
பிரசங்கிகளால் எழுதப்பட்ட
**சத்தியத்தின் குரல்**
என்ற நூல் வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
- ஆசிரியர்

**கீழ் காணும் கைப்பிரதிகள் வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.**









## வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள் தபால் செலவுக்கு
ரூ. 100/- மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

இயக்குனர்

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

த.பெ.எண் 27, காங்கேயம் 638-701.
தமிழ்நாடு, இந்தியா.

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701
Editor. S. Rajanayagam.